உ

சிவமயம்

இராகவன் இசை மாலை

தொகுப்பு

'தமிழ்க்கடல்', 'சிவமணி',
'சிவம்பெருக்கும் சீலர்',
ராய. சொ.

காரைக்குடி
ராம. வெ. ராம. திருநாவுக்கரசு
மகள் உமையாள்
புதுமை வெளியீடு
சௌமிய, சித்திரை அ.
(20-4-69)



உ
சிவமயம்

இராகவன் இசை மாலை

தொகுப்பு
'தமிழ்க்கடல்', 'சிவமணி',
'சிவம்பெருக்கும் சீலர்',
ராய. சொ.

★

காரைக்குடி
ராம. வெ. ராம. திருநாவுக்கரசு
மகள் உமையாள்
புதுமை வெளியீடு
சௌமிய, சித்திரை அ.
(20-4-69)

உள்ளுறை

உள்ளுறை (தொடர்ச்சி)

உ

சிவமயம்

இராகவன் இசைமாலை

நூல் முகம்

இந்நூல் இராமகாதையின் தொகுப்பு. கவிச்சக்கரவர்த்தி கம்பர் அருளிய இராமாயணத்தில் இராமபிரானை வழிபடும் 108 பாடல்கள் இந்நூலை அலங்கரிக்கின்றன. இராமபிரானிடம் பெருங்காதல் கொண்ட குலசேகரப் பெருமாள் பாடிய பதிகங்கள் இரண்டை இதில் சேர்த்திருக்கின்றோம்.

ஒன்று இராகவன் மீது குலசேகரர் பாடிய தாலாட்டு. மற்றொன்று இராமகாதையைக் கோவையாகக் குலசேகர ஆழ்வார் கூறும் சிறந்த பதிகம். தாலாட்டு 11 பாடல் இத் தொகுப்பு நூலின் முன்னும், இராமகாதை 11 பாசுரங்கள் இந்நூலின் பின்னும் அணி செய்கின்றன. மொத்தம் இந் நூலிலுள்ள பாடல்கள் 130.

ஆழ்வார்களுள் குலசேகர ஆழ்வார், இராமாவதாரத்தில் பெரிதும் ஈடுபட்டு உள்ளத்தைப் பறிகொடுத்தவர். இராமபிரானைப்பற்றி அப் பெரியார் பாடிய பாடல்கள் இன்னும் பல உள. விரிவஞ்சி அவற்றை எல்லாம் இங்கு எடுக்கவில்லை.

முன்னும் பின்னும் குலசேகரருடைய பாடல் அமைந்திருந்தாலும், இந்நூலைக் கம்பரின் தொகுப்பு நூல் என்று தான் சொல்லுதல் வேண்டும். கவிச்சக்கரவர்த்தி இராமபிரானைக் கவிச் சொல்லாகவும், பிறர் வாயிலாகவும் எவ்வளவு பாராட்டி வழிபடுகின்றார் என்பதை இந்நூல் நன்கு எடுத்துக்காட்டும். பலபாத்திரங்களின் வாயிலாக

இராகவன் இசையை ஆங்காங்கே அருளி மகிழ்கின்றார், கம்பர் பெருமான். யார் யார் வாயிலாகப் பாராட்டப் பெறுகின்றது என்பதை நூலின் முகப்பிலே உள்ள உள்ளுறை கூறும்.

இராகவனைக் கம்பர் வழிபடும் பாடல், இந்த நூலில் உள்ள நூற்று எட்டோடு அமைந்துவிட்டதாக எண்ண வேண்டாம். நூல் இன்னும் விரிவடையாது இருக்கவே ஓர் நல்ல அளவு வகுத்துக் கொள்ளப்பெற்றது.

பெருமாளின் தாலாட்டில் தொடங்கி, கம்பர் பெருமானின் இணையற்ற வழிபாட்டுப் பாடல்களையும், இறுதியிலுள்ள, குலசேகரரின் சுவைபட அமைந்த இராம காதைப் பாடல்களையும் படித்துச் சுவைத்து அன்பர்கள் பயன் பெற்று உய்வாராக!

இறை வழிபாட்டுத் தொகுப்பு நூல் பல வெளியிட்டிருக்கின்றேன். கம்பரிலிருந்து இராகவ வணக்கமாகிய ஓர் தொகுப்பு வெளியிடாக் குறை இன்று தீர்கின்றது. பாடல்களை நன்கு தெளிய, கருத்து, அரும் சொற்பொருள், விளக்கம் முதலியன தரப்பெற்றிருக்கின்றன.

இந்த நூலை, என்தம்பி, ராம. வெ. இராமனுதனின் மைந்தன் திருநாவுக்கரசு, மகள் உமையாள் புதுமையில் வெளியிட்டுப் புகழ் பெறுகின்றான்.

திருநாவுக்கரசுக்கும், உமையாளுக்கும், குடும்பத்தாருக்கும் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு!

காரைக்குடி-3.
20—4—'69

ராய. சொ.

இராகவன் இசை மாலை

கம்பர் பாடல்	.....	108
குலசேகரர் பாடல்	.....	22
	ஆக	130

இராகவன் தாலாட்டு

மன்னுபுகழ்க் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே!
தென் இலங்கைக் கோன்முடிகள்
சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ்
கணபுரத்துஎன் கருமணியே!
என்னுடைய இன்அமுதே!
இராகவனே! தாலேலோ.

-குலசேகரர்.

கருத்து:— நிலைபெற்ற புகழை உடைய கோசலையின் அழகிய வயிற்றில் பிறந்தவனே! தென் இலங்கை மன்னன் இராவணனின் பத்து மகுடங்களையும் சிதற அடித்தவனே!

சிறந்த தங்கத்தால் செய்யப்பெற்ற, பகைவரால் தீண்டக் கூட முடியாத, நல்ல பெரிய மதில்களால் சூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலே உறைகின்ற என்னுடைய கரிய மணியே! என் இனிய அமுதமே! இரகு குல திலகனே! உன்னைத் தாலாட்டுகின்றேன்.

அரும்சொற்பொருள்:— மன்னுதல்: நிலைபெறுதல். கன்னி: தொடப்படாதது. தாலாட்டுதல்: குழந்தைகளைத் தொட்டிலில் ஏற்றிப் பாடுதல். தால்: நாக்கு. திருக்கண்ணபுரம், நன்னிலத்துக்கு அணித்தேயுள்ள தலம்.

பாடல்-1

இராகவன் தாலாட்டு

புண்டரிக மலரதன்மேல்
　புவனியெலாம் படைத்தவனே!
திண்திறலாள் தாடகைதன்
　உரம்உருவச் சிலைவளைத்தாய்!
கண்டவர்தம் மனம்வழங்கும்
　கணபுரத்துஎன் கருமணியே!
எண்திசையும் ஆளுடையாய்!
　இராகவனே! தாலேலோ.

-குலசேகரர்.

கருத்து :— நின் உந்தித்தாமரைப் பூவின்மீது பிரமனைப் படைத்து, அவனைக்கொண்டு உலகத்தையெல்லாம் உண்டாக்கியவனே!

பேர் ஆற்றல் கொண்ட தாடகையின் மார்பை அம்பு ஊடுருவிச் செல்லுமாறு வில்லை வளைத்தவனே!

பார்த்தவர் மனத்தைப் பறிகொடுக்கும் சிறப்பு வாய்ந்த திருக்கண்ணபுரத்தின் எனது கருமாணிக்கமே!

எட்டுத் திக்குகளையும் ஆளுகின்றவனே! இராகவனே! உனக்குத் தாலாட்டு.

அருஞ்சொற்பொருள் :— புண்டரிகம் : தாமரை. புவனி : உலகம். திண்திறல் : மிக்க வலிமை. உரம் : மார்பு. சிலை : வில்.

பாடல்-2

இராகவன் தாலாட்டு

கொங்குமலி கருங்குழலாள்
கௌசலைதன் குலமதலாய் !
தங்குபெரும் புகழ்ச்சனகன்
திருமருகா ! தாசரதீ !
கங்கையிலும் தீர்த்தமலி
கணபுரத்துஎன் கருமணியே !
எங்கள்குலத்து இன்அமுதே !
இராகவனே ! தாலேலோ.

-குலசேகரர்.

கருத்து :— மணம் நிறைந்த கருமையான கூந்தலையுடைய கோசலையின் மேலான மகனே !

பெரும் புகழ் தங்கிய சனக மன்னனின் சிறந்த மாப் பிள்ளையே ! தசரதனின் மைந்தனே !

கங்கையைக் காட்டிலும் புனிதநீர் மல்கிய கண்ணபுரத் தின் என் கருமணியே !

எங்கள் குலத்தின் இனிய அமுதமே ! -இராகவனே ! தாலாட்டு.

அரும்சொற்பொருள் :— கொங்கு : வாசனை. குலம் : மேன்மை. தீர்த்தம் : புனிதம்.

பாடல்-3

இராகவன் தாலாட்டு

தாமரைமேல் அயனவனைப்
படைத்தவனே! தயரதன்தன்
மாமதலாய்! மைதிலிதன்
மணவாளா! வண்டினங்கள்
கா,மரங்கள் இசைபாடும்
கணபுரத்துஎன் கருமணியே!
ஏமருவும் சிலைவலவா!
இராகவனே! தாலேலோ.

-குலசேகரர்.

கருத்து :— தாமரைப் பூவின்மீது பிரமனைப் பெற்றவனே! தயரதச் சக்கரவர்த்தியின் பெருமகனே! சீதை நாயகா! வண்டுக்கூட்டங்கள் சோலை மரங்களிலே பண்பாடித் திரிகின்ற கண்ணபுரத்தின் என் கருமணியே!

அம்பு தொடுக்கும் வில்தொழில் வல்லவனே! இராகவனே! உன்னைத் தாலாட்டுகின்றேன்.

அரும்சொற்பொருள் :— அயன் : பிரமன். மைதிலி : மிதிலை மன்னன் மகள்; சீதை: ஏ : அம்பு.

பாடல்-4

இராகவன் தாலாட்டு

பார்ஆளும் படர்செல்வம்
பரதநம்பிக் கேஅருளி
ஆரா அன்பு இளையவனோடு
அருங்கானம் அடைந்தவனே !
சீர்ஆளும் வரைமார்பா !
திருக்கண்ண புரத்துஅரசே !
தார்ஆளும் நீள்முடிஎன்
தாசரதி ! தாலேலோ.

-குலசேகரர்.

கருத்து :— உலகை ஆளும் நிறைந்த செல்வத்தை, பரதனாகிய நம்பிக்கே கொடுத்து, வற்றாத அன்புகொண்ட இளையபெருமாளோடு அருமையான காட்டுக்குச் சென்றவனே !

திருமகளின் ஆளுகைக்கு உரிய மலை போன்ற மார்பனே ! திருக்கண்ணபுரத்து மன்னா !

மாலை அணிந்த நீண்ட முடியை உடைய தசரதன் மகனே ! உனக்குத் தாலாட்டு.

அரும்சொற்பொருள் :— படர் செல்வம்: பெருகிய பொருள். நம்பி : ஆணிற்சிறந்தவன். சீர் : திருமகள். வரை : மலை.

பாடல்-5

இராகவன் தாலாட்டு

சுற்றமெலாம் பின்தொடரத்
தொல்கானம் அடைந்தவனே!
அற்றவர்கட்கு அருமருந்தே
அயோத்திநகர்க்கு அதிபதியே!
கற்றவர்கள் தாம்வாழும்
கணபுரத்துஎன் கருமணியே!
சிற்றவைதன் சொல்கொண்ட
சிராமா! தாலேலோ.

-குலசேகரர்.

கருத்து :— உறவினர் அனைவரும் பின்பற்றிவர, பழமையான காட்டுக்குப் போனவனே!

இல்லாதவர்க்கு அருமையான அமுதம் போன்றவனே! அயோத்தி நகரத்தின் தலைவனே!

படித்தவர்கள் வாழுகின்ற கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கின்ற என் கரியமாணிக்கமே!

சிறிய தாயாகிய கைகேயி சொல்லைத் தலைமேல் தாங்கிக் கானகம் சென்ற இராமபிரானே! உன்னைத் தாலாட்டுகின்றேன்.

அரும்சொற்பொருள் :— சுற்றம் : உறவு. தொல் : பழைய. சிற்றவை : சிறிய தாய்.

இராகவன் தாலாட்டு

ஆலின்இலைப் பாலகனாய்
அன்றுஉலகம் உண்டவனே!
வாலியைக்கொன்று அரசுஇளைய
வானரத்துக்கு அளித்தவனே!
காலின்மணி கரைஅலைக்கும்
கணபுரத்துஎன் கருமணியே!
ஆலிநகர்க்கு அதிபதியே!
அயோத்திமனே! தாலேலோ

-குலசேகரர்.

கருத்து :— ஆலமரத்தின் இலையின் மேல் குழந்தையாகக் கிடந்ததோடு அந்தநாளில் உலகத்தைச் சாப்பிட்டவனே!

வாலியைக் கொன்று அவன் தம்பியாகிய சுக்கிரீவனுக்குக் கிட்கிந்தையின் அரசைக் கொடுத்தவனே!

காவிரிக் காலின் வழியாக இரத்தினங்களை இருகரையிலும் விசித்தள்ளுகின்ற கண்ணபுரத்தின் என் கருமணியே!

திருவாலி நகர் என்னும் தலத்தின் தலைவனே! அயோத்தி அரசே! உனக்குத் தாலாட்டு.

அரும்சொற்பொருள் :— கால் : பிரிவு; வாய்க்கால். ஆலி நகர் : திருவாலி என்னும் தலம்; இது நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளுள் ஒன்று; இதன் பகுதியிலேயே திருமங்கையாழ்வார் அவதரித்தார்; இத்தலம் சிகாழிக்கு தென்கிழக்கே ஆறு மைலில் இருக்கிறது.

பாடல்-7

இராகவன் தாலாட்டு

மலைஅதனால் அணைகட்டி
        மதிள்இலங்கை அழித்தவனே!
அலைகடலைக் கடைந்துஅமரர்க்கு
        அமுதுஅருளிச் செய்தவனே!
கலைவலவர் தாம்வாழும்
        கணபுரத்துஎன் கருமணியே!
சிலைவலவா! சேவகனே!
        சிராமா! தாலேலோ.

-குலசேகரர்.

கருத்து:— கற்களைக்கொண்டு சேதுகட்டி அதன்மூலம் கடலைக்கடந்து மதில் சூழ்ந்த இலங்கையை அழித்தவனே!

அலை கடலைக் கடைந்து தேவர்க்கு அமிழ்தம் கொடுத்தவனே!

கலை வல்லவர் வாழ்கின்ற கண்ணபுரத்து நிற்கும் என் கருமணியே!

வில்வல்லவனே! வீரனே! இராமபிரானே! தாலாட்டு.

அரும்சொற்பொருள்:— சேவகம்: வீரம்.

பாடல்-8

இராகவன் தாலாட்டு

தளை அவிழும் நறும்குஞ்சித்
  தயரதன் தன் குலமதலாய் !
வளையஒரு சிலைஅதனல்
  மதிள் இலங்கை அழித்தவனே!
களைகழுநீர் மருங்குஅலரும்
  கணபுரத்துஎன் கருமணியே !
இளையவர்கட்கு அருள்உடையாய்
  இராகவனே ! தாலேலோ !

-குலசேகரர்.

கருத்து :— கட்டு அவிழ்ந்த நல்ல சிகையைப்பெற்ற, தயரதனுடைய குலமகனே !

ஒரே வில்லாகிய கோதண்டத்தால் மதில் இலங்கையை முழுதும் தொலைத்தவனே !

களையாகக் கழுநீர்ப் பூக்கள் நெல்லின் பக்கத்திலே பூக்கும் கண்ணபுரத்து என் கருமணியே !

இளையவர்களிடத்திலே கருணையுள்ளவனே ! இராகவனே! தாலாட்டு.

அரும்சொற்பொருள் :—தளை: கட்டு. குஞ்சி : ஆண் தலை மயிர். வளைய : ஒருசேர. களை : பயிர்க்கு இடையூருக முளைக்கும் நீக்கத் தக்க பொருள். கழுநீர் : நீலோற்பலம். மருங்கு : பக்கம். அலர்தல் : பூத்தல்.

பாடல்-9

இராகவன் தாலாட்டு

தேவரையும் அசுரரையும்
　　திசைகளையும் படைத்தவனே !
யாவரும்வந்து அடிவணங்க
　　அரங்கநகர்த் துயின்றவனே !
காவிரிநல் நதிபாயும்
　　கணபுரத்துஎன் கருமணியே !
ஏவரிவெம் சிலைவலவா !
　　இராகவனே ! தாலேலோ !

-குலசேகரர்.

கருத்து ;— அமரரையும் அவுணரையும் திக்குகளையும் உண்டாக்கியவனே !

அனைவரும் வந்து திருவடியைத் தொழத் திருவரங்க நகரத்திலே பள்ளி கொண்டவனே !

நல்ல காவிரியாறு பாய்கின்ற கண்ணபுரத்தின் என்னுடை கரியமணியே !

அம்பு எய்யும் கட்டு அமைந்த கொடிய வில் வல்லவனே ! இராகவனே ! உன்னைத் தாலாட்டுகின்றேன்.

அரும்சொற்பொருள் ;— அசுரர் : அவுணர்; இவர்கள் தேவர்களின் பகைவர். ஏ : பாணம். வரி : கட்டு.

பாடல்-10

இராகவன் தாலாட்டு

கன்னிநன்மா மதிள்புடைசூழ்
கணபுரத்துஎன் காகுத்தன்,
தன்அடிமேல், 'தாலேலோ'
என்றுஉரைத்த தமிழ்மாலை,
கொல்நவிலும் வேல்வலவன்
குடைக்குலசே கரன்சொன்ன,
பன்னியநூல் பத்தும்வல்லார்
பாங்காய பத்தர்களே.

குலசேகரர்.

கருத்து :— பிறர் தீண்டுதற்கு அரிய, நல்ல, சிறந்த திருமதிலையுடைய திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் எனக்கு உரியவனான இராகவன் திருவடிமீது 'தாலேலோ' எனப்பாடிய தமிழ்மாலையாகிய, மாற்றாரைக் கொல்லும் பணியுடைய வேலில் வல்லவனாகிய குடையுடைக் குலசேகரன் உரைத்த பாடல் பத்தும் ஓதவல்லார் பண்புடை அடியாராவர்.

அரும்சொற்பொருள் :— கன்னிமதில் : மாற்றார் தொட முடியாத மதில். சொன்ன, பன்னிய என்பன ஒரு பொருள் சொற்கள். பன்னுதல் : திரும்பத் திரும்பச் சொல்லுதல். இது பதிகத்தின் முத்திரைப் பாடல். 'கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்துஎன்' என்ற சொற்றொடர் பதிகத்தின் முதல் பாட்டினின்றும் இறுதிப் பாட்டில் அப்படியே பெய்யப்பெற்றிருப்பது எண்ணி இன்புறத்தக்கது.

பாடல்–11

காப்பு

உலகம் யாவையும்
　　தாம்உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும்,
　　நீக்கலும், நீங்கலா
அலகி லாவிளை-
　　யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க்-
　　-கேசரண் நாங்களே.

-கம்பர்.

கருத்து :— உலகம் முழுதையும் தாம் உண்டாக்கலும், அவற்றை நிலைபெறச்செய்தலும், அழித்தலும் ஆகிய முத்தொழிலையும் இடைபெறாது ஆற்றிக்கொண்டிருக்கின்ற, கணக்கில்லாத விளையாட்டு வல்லவர் எவரோ, அவரே நம் தலைவர். அத் தலைவருக்கே நாங்கள் அடைக்கலப் பொருள்.

அருஞ்சொற்பொருள் :— நிலைபெறுத்தல் : காத்தல். அலகு : கணக்கு சரணம் : அடைக்கலம்.

விளக்கம் :— உளவாக்கல், நிலைபெறுத்தல், நீக்கல் மூப் பெரும் கடவுளர் தொழில். இது கம்ப இராமாயணத்தின் காப்புப் பாடல். வில்லிபுத்தூர் ஆழ்வாரும் இக்கருத்தையே வைத்து 'ஆக்குமாறு அயனும்' என்று காப்புக் கூறினர். 'உலகம் யாவையும்' என்று கம்பர் தொடங்கினர். 'உலகெலாம்' என்று சேக்கிழார் எடுத்தார்.

பாடல்-12

கடவுள் வாழ்த்து

வான் நின்று இழிந்து, வரம்புஇகந்த
மாபூ தத்தின் வைப்புஎங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறமும் உளன்என்ப;
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்பக் கோல்துறந்து,
கானும் கடலும் கடந்து,இமையோர்
இடுக்கண் தீர்த்த கழல்வேந்தை.

-கம்பர்.
(அயோத்திக் காண்டம்)

கருத்து :— கூனல் கொண்ட மந்தரையும், சிற்றன்னையாகிய அரசி கைகேயியும் கொடுமைபுரிய, அதனால் செங்கோலேற்று அரசு செய்தலைவிட்டு, காடும் கடலும் நீந்திச் சென்று, மாற்றாரை அழித்து, அமரர்கள் துன்பத்தைத் தீர்த்தருளிய வீரக்கழல் சூடிய இராமபிரானாகிய மன்னனை, வானிலிருந்து இறங்கி, சிறப்புடைய பூதங்களின் சேர்க்கையாக எல்லா இடத்தும் அளவுகடந்து, உடம்புள் உயிர்போலவும், உயிரினுள்ளே உணர்வு போலவும், உள்ளும் வெளியும் நிறைந்துள்ள தனிப் பொருள் என்று கூறுவர் சான்றோர்.

அரும்பொருள் :— கூன் : கூனலையுடைய மந்தரை.

விளக்கம் :— பொருள்கொள்ளுதற்கு 'கூன்' என்பதை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

பாடல்–13

கடவுள் வாழ்த்து

பேதி யாதுநிமிர்
பேதஉரு வம்பிறழ்கிலா
ஓதி ஓதிஉணா-
-ருந்தொறும் உணர்ச்சிஉதவும்
வேதம், வேதியர்,
விரிஞ்சன்முத லோர்தெரிகிலா
ஆதி தேவர், அவர்
எம்அறிவினுக்கு அறிவுஅரோ !

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— வேறுபடாமல் நிமிர்ந்திருக்கின்றவரும் வேறு பட்ட உருவங்கள்தோறும் நீங்காதிருக்கின்றவரும் பன்முறையும் பயின்று, பயின்று, அறியும் போதெல்லாம் உண்மை உணர்வை அளிக்கின்ற மறைகளும், மறையோரும் பிரமன் முதலானோரும் அறிய முடியாதவரும் ஆகிய முதற்கடவுள் எவரோ அவ் இறைவரே எம் அறிவினுக்கு அறிவாவார்.

அரும்சொற்பொருள்:— ஓதுதல்: திரும்பத்திரும்பப்பயிலுதல். விரிஞ்சன் : பிரமன். அரோ : அசை.

விளக்கம் :— அறிவினுக்கு அறிவு ஆதிதேவர் என்னும் கருத்தை ஒட்டி, 'சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே' என்கிறார் தாயுமானார்.

பாடல்-14

விராதன் வழிபாடு

வேதங்கள் அறைகின்ற
உலகெங்கும் விரிந்தனஉன்
பாதங்கள் இவைஎன்னில்
படிவங்கள் எப்படியோ!
ஓதம்கொள் கடல்அன்றி
ஒன்றிேைடு ஒன்றுஒவ்வாப்
பூதங்கள் தொறும்உறைந்தால்
அவைஉன்னைப் பொறுக்குமோ

கம்பர்.

(ஆரணிய காண்டம்)

கருத்து :— மறைகளால் பாராட்டிச் சொல்லப் பெறுகின்ற உலக முழுதும் பரந்திருப்பன உன்னுடைய திருவடிகளாகிய இவைஎன்ருல், உன்னுடைய உருவங்கள் எத்தன்மையனவோ? ஒலியை எழுப்புகின்ற கடலினிடத்து அல்லாமல், ஒன்றுக்கொன்று தன்மையில் மாறுபட்ட எல்லாப் பூதங்களுள்ளும் நீ தங்குவாயாளுல் அவைகள் உன்னைப் பொறுக்க வல்லனவா?

அரும்பொருள் :— ஓதம் : ஓசை. பூதம் : பஞ்சபூதம்.

விளக்கம் :— இது முதல் 14 பாடல்கள் விராதன் சாபம் நீங்கி, இராமபிரானை வழிபடுதல்.

விராதன் வழிபாடு

கடுத்தகராம் கதுவ,நிமிர்
கைஎடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை அனைத்தினுஞ்சென்று
ஒலிகொள்ள, உறுதுயரால்
'அடுத்தபெரும் தனிமூலத்து
அரும்பரமே! பரமே!'என்று
எடுத்து,ஒருவா ரணம் அழைப்ப,
நீயோஅன்று 'ஏன்?'என்றாய்.

-கம்பர்.

(ஆரணிய காண்டம்)

கருத்து :— கோபம் கொண்ட முதலை, காலைப்பற்ற, பெரிய துதிக்கையை மேலே தூக்கி, உடம்பு நடுங்கி, எல்லாத் திக்குகளிலும் போய் அபயக்குரல் மோத, கடும் துன்பத்தால், ஒரு யானையானது, "அடியாரை நெருங்கிக் காக்கின்ற ஒப்பற்ற முழுமுதற் பரம்பொருளே! அரிய பரம்பொருளே"என்று அலற, நீயல்லவா அந்தநாளில், ஏன்?' என்று நண்ணி இடர்களைந்தாய்,

அரும்சொற்பொருள் .— கடுத்தல் : சினம்கொள்ளல். கராம், முதலை. கதுவுதல் : கவ்வுதல். உறுதுயரம் : பெரும் துன்பம். வாரணம்: கஜேந்திரன் என்ற யானை.

விளக்கம் :— யானைக்கு அருள்செய்த செய்தி ஆழ்வார் களால் பரக்கச் சொல்லப்பெருகின்றது.

விராதன் வழிபாடு

புறம்காணுர் அகம்காணுப்
பொருள்! முகத்தின் அருள்நோக்கம்
இறங்காத தாமரைக்கண்
எம்பெருமான்! இயம்பாயால்;
அறம்காத்தற்கு உனக்குஒருவர்
ஆரும்ஒரு துணை இன்றிக்
கறங்குஆகும் எனத்திரிய
நீயோதான் கடவாயே?

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— வெளித்தோற்றம் காணமாட்டார் உள்உணர்விலும் காணமுடியாத பொருளே! முகத்தின் கருணைப் பார்வை குறையாத தாமரை போன்ற கண்களையுடைய எம்தலைவனே! உனக்கு எவர் ஒருவர் துணையுமின்றி, அறத்தைப் பாது காத்தற்கு, சுழலும் காற்றுடிபோல் திரிய வல்லாய் நீயோதான். சொல்லுவாயாக!

அரும்சொற்பொருள் :— புறம்: வெளி. இறங்குதல்: குறைதல். கறங்கு: காற்றுடி.

விளக்கம் :— இயம்பாய்’ என்பதை இறுதியாகக் கொள்ள வேண்டும். ‘கூட்டொருவரையும் வேண்டா’ என்றசொற்றொடர் இப்பாடல் கருத்தோடு பொருந்தும்.

விராதன் வழிபாடு

துறப்பதே தொழிலாகத்
தோன்றினோர் தோன்றியக்கால்,
மறப்பரோ தம்மை? அது
அன்றாகி, மற்றவர்போல்
பிறப்பரோ? எவர்க்கும்தாம்
பெற்றபதம் பெறல்அரிதோ?
இறப்பதே பிறப்பதே
எனும்விளையாட்டு இனிதுஉகந்தோய்!

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— இறத்தல், பிறத்தல் என்ற இரண்டையும் விளையாட்டாக, இனிமையாக ஏற்று மகிழ்ந்தவனே! துறவு மனப்பான்மையைக் கருத்தில் கொண்டு பிறந்தவர், பிறந்த பொழுது தங்கள் நிலையை மறப்பார்களா? அவ்வாறின்றி, இவ்வுலகில் பிறக்கின்ற ஏனையோர்கள் போலப் பிறப்பார்களா? யாருக்கும் தம் முன்னைப் பதவியை அடைதல் அருமையாகுமா?

அரும்சொற்பொருள் :— துறத்தல்: பற்றுவிடுதல். பதம்: பதவி.

விளக்கம் :— தமக்காகஅன்றி உலகம் வாழத்தோன்றிய பெரியோர்கள் தங்கள் நிலையை மறக்கமாட்டார் என்பது கருத்து.

பாடல்-18

விராதன் வழிபாடு

பனிநின்ற பெரும்பிறவிக்
கடல்கடக்கும் புணைபற்றி
நனிநின்ற சமயத்தோர்
எல்லாரும் 'நன்று' என்னத்
தனிநின்ற தத்துவத்தின்
தகைமூர்த்தி நீஆகில்
இனிநின்ற முதல்தேவர்
என்கொண்டுஎன் செய்வாரே?

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— துன்பத்தைத்தரும் பெரிய பிறவி என்ற கடலை நீந்தும் தோணியைப் பிடித்துக் கொண்டு, நன்னெறியில் நின்ற சமயவாதிகள் யாவரும் 'நன்று' எனப் பாராட்டுமாறு ஒப்பற்று விளங்கும் உண்மையின் தகுதி வாய்ந்த வடிவுடையவன் நீ என்றால், முதற்கடவுளர் என்று நின்ற எவரும் இனி எதைக்கொண்டு என் செய்ய ஆற்றுவார்.

அருஞ்சொற்பொருள்:— பனி: துன்பம், புணை: தெப்பம். நனி: நன்றாக. தனி: ஒப்பற்றதன்மை. தத்துவம்: உண்மை.

விளக்கம்:— 'பிறவிப்பெருங்கடல்' என்பது திருக்குறள், 'பெரும் பிறவிப்பௌவம்' என்பது திருவாசகம்.

விராதன் வழிபாடு

ஓயாத மலர்அயனே
முதல்ஆக உளராகி,
மாயாத வானவர்க்கும்
மற்றுஒழிந்த மன்உயிர்க்கும்
நீஆதி முதல்தாதை,
நெறிமுறையால் ஈன்று எடுத்த
தாய்ஆவார் யாவரே?
தருமத்தின் தனிமூர்த்தி!

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— அறத்தின் ஒப்பற்றவடிவமே! ஒழிவில்லாமல் படைத்தல் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்ற பூவில் உறையும் பிரமன் முதலான அழிவில்லாத அமரர்கட்கும் அவரல்லாத ஏனைய உயிர்கட்கும் நீயல்லவா ஆதி முதல் தாதையாக அமைந்திருக்கின்றாய்? அங்ஙனமாக, ஒழுங்கு முறைப்படி அவ்உயிர்களைப் பெற்று எடுத்த தாயாவார் எவர்?

அருஞ்சொற்பொருள் :— மாய்தல் : சாதல். மன் : நிலைபேறு. உயிர்க்கு அழிவில்லையாதலின் 'மன் உயிர்' என்றார். ஆதியும், முதலும் ஒருபொருட் சொற்கள்.

விளக்கம் :— எல்லா உயிர்களையும் ஈன்றது இறையே ஆதலின் இராமனாகிய இறையை, 'நீ ஆதி முதல்தாதை' என்று இயம்பப்பெற்றது.

பாடல்-20

விராதன் வழிபாடு

நீஆதி பரம்பரமும்;
நின்னவே உலகங்கள்;
ஆயாத சமயமும்நின்
அடியவே; அயல்இல்லை;
தீயாரின் ஒளித்தியால்,
வெளிநின்றால் தீங்குஉண்டா?
வீயாத பெருமாய
விளையாட்டும் வேண்டுமோ?

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— முதற்பரம்பொருளும் நீயே; உலகங்களனைத்தும் உன்னுடையனவே; ஆராய்ந்து உன் இயல்பை அறிய முடியாத புறச்சமயங்களும் உன்அடிக்குக் கீழ்ப் பட்டனவே; அவை மாறுகமாட்டா. அங்ஙனமாக, நீ ஏன் கொடியவர்களைப் போல மறைந்திருக்கின்றாய்? யாவரும் காணுமாறு நீ வெளிப்பட்டு நின்றால் தீமையா நேரும்? அழிவில்லாத பெரிய வியக்கத்தக்க விளையாட்டு வேண்டுமா? வேண்டாம் அப்பா!

அருஞ்சொற்பொருள்:— பரம்பரம்: மேல் ஒரு பொருளுமில்லா மெய்ப்பொருள். அயல்: மற்றது. ஒளித்தல்: மறைதல். வீதல்: அழிதல். மாயம்: வியப்பு.

பாடல்-21

விராதன் வழிபாடு

தாய்தன்னை அறியாத
கன்றுஇல்லை ; தன்கன்றை
ஆயும் அறியும் ;
உலகின்தா யாகி,ஐய !
நீஅறிதி எப்பொருளும்;
அவைஉன்னை நிலைஅறியா;
மாயைஇது என்கொலோ ?
வாராதே வரவல்லாய் !

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— ஐயனே! அடியார்கள் உன்னிடத்து வாராதிருக்கும் போதே அவர்களை வந்து அடைய வல்லவனே ! தாய்ப் பசுவை அறியாத கன்று உலகில் இல்லை. தன்னுடைய கன்றைத் தாயும் அறிந்துகொள்ளும். நீ உலகு அனைத்திற்கும் தாயாகி, எல்லாப் பொருள்களையும் அறிகின்றாய். நீ படைத்த அப்பொருள்கள் உன் நிலையை அறியமாட்டா. இத்தகைய மாயையை நீ ஏன் செய்கின்றாய்?

அரும்சொற்பொருள் :— ஆய் : தாய்.

விளக்கம் :— 'பல்லாவுள் உய்த்துவிடினும், குளக்கன்று, வல்லதாம் தாய் நாடிக் கோடலை' என்பது நாலடியார். தன்னை அடைய முடியாமல் கடவுள் மயக்குகின்றார் என்பதை 'தன்னை நண்ணரிய வகை மயக்கி' என்பர் திருஞானசம்பந்தர்.

விராதன் வழிபாடு

'பன்னல்ஆம்' என்றுஉலகம்
பலபலவும் நினையுமால்;
உன்அலால் பெரும்தெய்வம்
உயர்ந்துளோர் ஒழுக்குஅன்றே;
அன்னஊர் தியைமுதலாம்
அந்தணர்மாட்டு அருந்தெய்வம்
நின்அலால் இல்லாமை
நெறிநின்றார் நினையாரோ.

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— பலபல கடவுள்களையும் ஏத்தி வழிபடலாம் என்று உலகம் எண்ணும்; ஆனால் உன்னைத்தவிர, பெரிய கடவுள் வேறு இல்லை என்பது, உயர்ந்தவர்களான அன்னத்தைச் செலுத்தும் பிரமன் முதலான அந்தணர்களிடம் காணும் ஒழுக்கமுறையாகும்; அவர்களின் அருந்தெய்வம் நீ அல்லாது இன்மையை நல்வழியில் செல்லுவார் அறிவர்.

அரும்சொற்பொருள் :— பன்னல் : சொல்லுதல். ஊர்தி : வாகனம்.

விளக்கம் :— இணையற்ற தெய்வம் என்பதைக்காட்ட, 'பெருந்தெய்வம்' 'அருந்தெய்வம்' என்று பேசப்பெற்றது.

பாடல்–23

விராதன் வழிபாடு

பொருஅரிய சமயங்கள்
புகல்கின்ற புத்தேளிர்
இருவினையும் உடையார்போல்
அருந்தவம்நின்று இயற்றுவார் ;
திருஉறையும் மணிமார்ப !
நினக்குஎன்னை செயற்பால ?
ஒருவினையும் இல்லார்போல்
உறங்குதியால் உறங்காதாய் !

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— திருமகள் தங்கியிருக்கின்ற அழகிய மார்பனே! ஒன்றுக்கொன்று பொருந்தாத புறச் சமயங்கள் சொல்லுகின்ற கடவுளர்கள், நல்வினை, தீவினையென்ற இருவினைகளையும் கொண்ட மக்களைப்போல, செய்தற்கரிய தவத்தை நின்று செய்வார்கள். உனக்கு அவ்வாறு செய்யத்தக்கது ஏதும்இல்லை. எனவேதான் ஒரு வேலையும் இல்லாதவனைப் போல உறங்காதவனாகிய நீ உறங்குகின்றாய்!

அருஞ்சொற்பொருள் :— பொருவுதல் : ஒத்தல். புத்தேளிர் : கடவுளர்.

விளக்கம் :— உறங்காது உறங்குதல் அறிதுயில்.

பாடல்–24

விராதன் வழிபாடு

அரவுஆகிச் சுமத்தியால்;
அயில்எயிற்றின் ஏந்துதியால்;
ஒருவாயின் விழுங்குதியால்;
ஓர்அடியால் ஒளித்தியால்;
திருஆன நிலமகளை;
இஃதுஅறிந்தால் சீறுளோ?
மருஆரும் துழாய்அலங்கல்
மணிமார்பின் வைகுவாள்.

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— சிறந்த நிலமகளாகிய தேவியை ஆதிசேடன் என்னும் பாம்பாகித் தாங்குகின்றாய்; அவளைப் பன்றி உரு எடுத்து, கூர்மையான பற்களால் குத்தி எடுக்கின்றாய்; அத்தேவியை ஒரே வாயினால் விழுங்கிவிடுகின்றாய்; அந் நிலமங்கையை ஒரு அடியில் (வாமனனாக இருந்து பேருரு எடுத்து) மறைத்து விடுகின்றாய்; மணம் நிறைந்த துழாய் மாலை அணிந்த உன்னுடைய அழகிய மார்பில் இடையறாது தங்கியிருக்கின்ற திருமகள் உன் இச் செய்கைகளை அறிந்தால் சினம்கொள்ள மாட்டாளா?

அரும்சொற்பொருள் :— அரவு: (ஈண்டு) ஆதிசேடன். ஆதி சேடன் திருமாலின் கூறு என்பது கருத்து. அயில்: கூர்மை. எயிறு : பல். மரு : மணம். அலங்கல் : மாலை.

பாடல்-25

விராதன் வழிபாடு

மெய்யைத்தான் சிறிதுஉணர்ந்து
நீவிதித்த மன்உயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ?
உனக்குஎன்ன குறைஉண்டோ?
வையத்தார் வானத்தார்
மழுவாளிக்கு அன்றுஅளித்த
ஐயத்தால் சிறிதுஐயம்
தவிர்ந்தாரும் உளர்,ஐயா!

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— ஐயா! உன்னால் தோற்றுவிக்கப் பெற்ற, நிலை பெற்ற உயிர்கள் உண்மையைச் சிறிதாவது அறிந்து கடைத்தேறக் கூடாதா? அப்படி அவர்கள் ஈடேறுவதில் உனக்கு என்ன குறை நேரும்? மழுப்படையை உடைய சிவபிரானுக்கு அன்று நீ கொடுத்த பிச்சையைக் கொண்டு இம் மண்ணுலகில் வாழ்வாருள்ளும் வானுலகத்தாருள்ளும் கொஞ்சம் ஐயம் தீர்ந்தவரும் உளர்.

அருஞ்சொற்பொருள் :— மெய் : உண்மை. உய்தல்: கடைத்தேறுதல். மழுவாளி: சிவன். ஐயம்: (முன்னையது) பிச்சை (பின்னையது) சந்தேகம்.

விளக்கம் :— உயிர்களையெல்லாம் தன் அடிப்படுத்தவல்ல கடவுள் அவ்வாறு செய்யாமைக்கு இரங்கிக் கூறும் பாடல் இது.

விராதன் வழிபாடு

அன்னமாய் அருமறைகள்
அறைந்தாய்நீ; அவைஉன்னை
முன்னம்ஆர் ஓதுவித்தார்?
எல்லாரும் முடிந்தாரோ?
பின்னம்ஆய் ஒன்றுதல்,
பிரிந்தேயோ? பிரியாதோ?
என்னமா மாயம்இவை,
ஏனமாய் மண்இடந்தாய்!

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— வராக உரு எடுத்து மண்ணைத் தோண்டி எடுத்தவனே! நீ அன்ன உரு எடுத்து, பிரம்மதேவனுக்கு அறிதற்கு அருமையான மறைகளை உணர்த்தினாய்! அவ்வேதங்களை முன்னே உனக்கு அறிவித்தவர் யார்? அவரெல்லாம் இறந்து ஒழிந்தனரோ? பொருள்களுள் வேறுபட்டும், ஒன்றாகியும் நீ இருத்தல் அப்பொருள்களைப் பிரிந்தா? பிரியாமலா? எல்லாப் பொருள்களிலும் கலவாமலும் கலந்தும் நீ இருக்கும் இது எவ்வளவு பெரிய மாயை!

அரும்சொற்பொருள் :— பின்னம்: வேறுபடுதல். ஏனம்: பன்றி. இடத்தல்: தோண்டுதல்.

பாடல்–27

விராதன் வழிபாடு

ஒப்புஇறையும் பெறல்அறிய
ஒருவா!முன் உவந்துஉறையும்
அப்புஉறையுள் துறந்து,அடியேன்
அருந்தவத்தால் அணுகுதலால்,
இப்பிறவிக் கடல்கடந்தேன்;
இனிப்பிறவேன்; இருவினையும்
துப்புஉறழும் நீர்த்தசுடர்த்
திருவடியால் துடைத்தாய்நீ.

-கம்பர்.

(ஆரணிய காண்டம்)

கருத்து :— ஒப்புச் சிறிதும் பிறரால் பெற முடியாத ஒருவனே! நீ முன்னே மகிழ்ந்து தங்கியிருந்த கடலிடத்தை விட்டு, அடியேன் செய்த அருமையான தவத்தால் என்னை அடைந்தமையால், இந்தப் பிறவி என்னும் கடலைத் தாண்டினேன்; இனி நான் பிறக்கமாட்டேன்; என்னைச் சேர்ந்த இரு வினைகளையும், உன்னுடைய பவழம் போன்ற பண்புள்ள ஒளித்திருவடியால் நீ அழித்து விட்டாய்.

அரும்சொற்பொருள் :— இறை : சிறிது. அப்பு : நீர். துப்பு: பவழம். உறழுதல் : ஒத்தல். நீர்மை : பண்பு. சுடர் : ஒளி

இந்திரன் வழிபாடு

தோய்ந்தும் பொருள்அனைத்தும் தோயாது நின்ற
சுடரே! தொடக்குஅறுத்தோர் சுற்றமே! பற்றி
நீந்த அரிய நெடுங்கருணைக்கு எல்லாம்
நிலையமே! வேத நெறிமுறையின் நேடி
ஆய்ந்த உணர்வின் உணர்வே! பகையால்
அலைப்புண்டு அடியேம் அடிபோற்ற, அந்நாள்
ஈந்த வரம்உதவ எய்தினையே! எந்தாய்!
இருநிலத்த வோ,நின் இணையடித் தாமரைதாம்.

கம்பர்.

(ஆரணிய காண்டம்)

கருத்து :— பொருள்கள் அனைத்தினும் விரவியும் கலவாதும் நின்ற ஒளியே! உலகப்பற்றினின்றும் நீங்கினுர்க்கு உறவே! எதனையும் பிடித்துக் கரையேற முடியாத அருமையான நீண்ட அருளுக்கெல்லாம் உறைவிடமே! மறைவழி மரபினுலே தேடி ஆராய்ந்த அறிவுகொண்டு உணரத் தக்கவனே! நாங்கள் மாற்றுரால் நலிவுண்டு உன் திருவடியை வணங்க, அந்த நாளில் எங்களுக்குத் தந்த வரத்தைக் காக்க மண்ணுலகில் தோன்றினையே! எந்தையே! உன்னுடைய இரண்டு திருவடிகளாகிய தாமரைகளும் இந்தப்பரந்த நிலவுலகத்தில் பொருந்தத் தக்கனவா?

அரும்சொற்பொருள் :— தொடக்கு: பந்தம். நிலயம்: உறைவிடம். நேடுதல்: தேடுதல். இரு: பெரிய. இணை: இரண்டு.

விளக்கம் :— இது முதல் ஐந்து பாடல்கள் சரபங்கர் பிறப்பு நீங்கு படலத்தில், இராமனை இந்திரன் வழிபடல்.

பாடல்–29

இந்திரன் வழிபாடு

மேவா தவர்இல்லை, மேவினரும் இல்லை ;
வெளியோடு இருள்இல்லை ; மேல்கீழும் இல்லை;
மூவா மைஇல்லை, மூத்தமையும் இல்லை ;
முதல்இடையோடு ஈறுஇல்லை ; முன்னொடு
பின்இல்லை ;
தேவா! இங்கு இவ்வோ நின் தொன்றுநிலை என்றால்,
சிலைஏந்தி வந்துஎம்மைச் சேவடிகள் நோவக்
காவாது ஒழியின், பழிபெரிதோ? அன்றேல்
கருங்கடலில் கண்வளர்ந்தோய்! கைம்மாறும்
உண்டோ ?

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— கரிய கடலிலே கண் உறங்கிய தேவா ! உனக்குப் பொருந்தாதாரும் இல்லை, பொருந்தினவரும் இல்லை; நீ இருக்குமிடத்தில் ஒளியும் இல்லை, இருளும் இல்லை; மேலும் இல்லை, கீழும் இல்லை; உனக்கு இளமையும், இல்லை, முதுமையும் இல்லை; ஆதி, நடு, அந்தம், மூன்றுமே இல்லை; முன்னுமில்லை, பின்னுமில்லை; உன் முன்னையநிலை இதுவென்றால், சிவந்த அடிகள் வருந்த வில் தாங்கி வந்து எங்களைக் காவாவிட்டால் அதனால் உனக்கு ஏற்படும் பழி பெரிதல்லவா ? எங்களைக் காத்தலால் நீ எய்தும் கைம்மாறு என்ன ?

அரும்சொற்பொருள் :— மூவாமை: இளமை. இவ்வோ. இதுவோ.

இந்திரன் வழிபாடு

நாழி நவைதீர் உலகெலாம் ஆக,
நளினத்து நீதந்த நான்முகனூர் தாமே,
ஊழி பலபலவும் நின்றுஅளந்தால், என்றும்
உலவாப் பெருங்குணத்த உத்தமனே! மேல்நாள்,
தாழி தரைஆகத் தண்தயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக் கைநோவ,
ஆழி கடைந்துஅமுதம் எங்களுக்கே ஈந்தாய்;
அவுணர்கள்தாம் நின்அடிமை அல்லாமை
உண்டோ?

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— கொப்பூழ் பூவிலே நீ தோற்றுவித்த பிரமதேவன் உலக முழுதையும் குற்றமற்ற அளவு கருவியாகக்கொண்டு, பற்பல ஊழிக்காலம் நின்று, அளந்தாலும், எந்தக் காலத்தும் அளவிட முடியாத சிறந்த குணங்கள் வாய்ந்த உயர்ந்தோனே! பண்டை நாளில் நிலத்தைப் பாத்திரமாகவும், நீரைத் தயிராகவும், பெரிய மலையை மத்தாகவும், கொண்டு, தாமரை போன்ற உன் திருக்கைகள் வருந்தக் கடலைக் கடைந்து அமுதத்தை எங்களுக்கு மட்டும் தந்தாய். அசுரர்கள் உனக்கு அடியார்கள் அல்லரா?

அரும்சொற்பொருள் :—நாழி : முகத்தல் அளவை. நவை : குற்றம். நளினம் : தாமரை. தாழி : தடா. அவுணர் : அசுரர்.

பாடல்-31

இந்திரன் வழிபாடு

ஒன்ருகி மூலத்து உருவம் பலஆகி
  உணர்வும் உயிரும் பிறிதாகி, ஊழி
சென்றுஆசு அறும்காலத்து அந்நிலயது ஆகித்
  திறத்துஉலகம் தாஞகிச் செஞ்சேவே நின்ற
நன்ருய ஞானத் தனிக்கொழுந்தே! நங்கள்
  நவைதீர்க்கும் நாயகமே! நல்வினேயே நோக்கி
நின்ருரைக் காத்தி, அயலோரைக் காய்தி,
  நிலேஇல்லாத் தீவினேயும் நீதந்தது அன்றே?

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— ஆதியில் ஒன்ருக இருந்து, பின்னர் பல வடிவம் பெற்று, அவ்வடிவங்களில் அறிவும், ஆவியும், வேறு வேருகி உலகம் முடிவுறும் ஊழிக்காலம் கடந்து திரும்பப் பழைய நிலேமையை அடைந்து, மீண்டும் படைக்குங்கால் பலவகையான உலகமாகி, ஒழுங்காக நின்ற நல்ல ஒப்பற்ற அறிவின் தளிரே! எங்கள் குற்றங்களே அழிக்கும் நாயகனே! நற்செயலேயே எண்ணி நின்ருரைக் காப்பாய்; மற்றையோரைத் தொலேப்பாய்: நிற்றல் இல்லாத கொடுஞ் செய்கையும் நீ படைத்ததுதானே?

அரும்சொற்பொருள் :— மூலம் : முதல். ஆசுஅறுதல் : முடிவுபெறல். செஞ்ச : செவ்வையாக. நவை : குற்றம்.

பாடல்–32

இந்திரன் வழிபாடு

வல்லே வரம்புஇல்லாத மாயவினை தன்னால்
மயங்கினரோடு எய்தி, மதிமயங்கி, மேல்நாள்
அல்லே இறையவன்நீ ஆதிஎனப் பேதுற்று
அலமருவேம்; முன்னை அறப்பயன் உண்டாக,
'எல்லே வலயங்கள் நின்னுழை'என்று, அந்நாள்,
எரியோனைத் தீண்டி எழுவர் எனநின்ற
தொல்லே முதல்முனிவர் சூளுற்ற போதே
தொகைநின்ற ஐயம் துடைத்திலையோ? எந்தாய்!

-கம்பர்.

(ஆரணிய காண்டம்)

கருத்து :— எம்தந்தையே! வன்மைகொண்ட அளவுகடந்த மாயச் செய்கையால் மதிமயக்கம் அடைந்தவரோடு சேர்ந்து நாங்களும் மயங்கி, அந்த நாளில் நீ முழுமுதற் கடவுள் என்றும், அல்லன் என்றும் வேறுபட்டு வருந்தினோம். அத்தகைய எங்கள் முன்னர் நல்வினைப் பயன் அடைய, 'உலகங்களின் எல்லே உன்னிடத்தேயுள்ளன' என மேல்நாள் பழமையான முதல் முனிவர் எழுவர் தீக் கடவுளைத்தொட்டு, சான்று காட்டியபோது, பற்றி நின்ற சந்தேகத்தை நீ துடைத்தாயல்லவா?

அருஞ்சொற்பொருள் :— வல்லே : ஆற்றல். வரம்பு : எல்லே. அலமருதல் : வருந்துதல். வலயம் : உலகம். உழை : இடத்து. எரியோன் : தீக்கடவுள்.

விளக்கம் :— முனிவர் எழுவர் நெருப்புச்சாட்சியாக முதல் தேவர் என்னும் ஐயத்தைத் தீர்த்தனர் என்பது பழைய கதை.

கவந்தன் வழிபாடு

ஈன்றவனோ எப்பொருளும்?
        எல்லைதீர் நல்அறத்தின்
சான்றவனோ? தேவர்
        தவத்தின் தனிப்பயனோ?
மூன்று கவடாய்
        முளைத்துஎழுந்த மூலமோ?
தோன்றி, அருவினையேன்
        சாபத்துயர் துடைத்தாய்!

-கம்பர்.

(ஆரணிய காண்டம்)

கருத்து:— என் முன் வெளிப்பட்டு, தீவினையுடைய என் சாபத்துன்பத்தை நீக்கிய நீ எல்லாப் பொருள்களையும் தோற்றுவித்தவனோ? நல்ல அறத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்தவனோ? அமரர்கள் செய்த தவத்தின் ஈடற்ற பயனோ? அயன், மால், அரன் என மூன்று கிளை களாய் தோன்றி எழுந்த மூலமான பரம்பொருளோ? உன்னை என்னென்பேன்?

அருஞ்சொற்பொருள் :— எல்லை தீர் : அளவு கடந்த. கவடு : கிளை.

விளக்கம் :— இப்பாடல் தொட்டு ஒன்பது பாடல்கள் கவந்தன் சாபம் நீங்கி, இராமபிரானை வழிபடல்.

பாடல்–34

கவந்தன் வழிபாடு

மூலமே இல்லா
முதல்வனே! நீமுயலும்
கோலமோ, யார்க்கும்
தெரிவுஅரிய கொள்கைத்தால்;
ஆலமோ? ஆலின்
அடையோ? அடைக்கிடந்த
பாலனோ? வேலைப்
பரப்போ? பகராயே!

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— ஒரு மூலமில்லாமல் தோன்றிய முதன்மையான வனே! நீ முயன்று கொள்ளும் உருவம் யாராலும் அறிந்து கொள்ள முடியாத தகுதியை உடைத்தாயிருக்கின்றது. நீ கொண்ட கோலம், ஆலமரமோ? அன்றி அவ் ஆல மரத்தின் இலையோ? அவ் இலையின் மேற்கிடந்த பிள்ளையோ? அல்லது கடலின் பரவலோ? இயம்பு வாயாக!

அரும்சொற்பொருள் :— கோலம் : வடிவம். அடை : இலை. வேலை : கடல்.

கவந்தன் வழிபாடு

காண்பார்க்கும் காணப்
படுபொருட்கும் கண்ஆகிப்
பூண்பாய்போல் நிற்றியால்,
யாதுஒன்றும் பூணுதாய்!
மாண்பால் உலகை
வயிற்றுஒளித்து வாங்குதியால்;
ஆண்பாலோ? பெண்பாலோ?
அப்பாலோ? எப்பாலோ?

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— எந்தப் பொருளிலும் பற்றுவைக்காத நீ பொருள்களைக் காணும் திறனுள்ள உயிர்கட்குக் கண்ணுகவும், காணப்படும் பொருள்களுக்கு இடமாகவும், அவற்றைப் பற்றிக்கொள்பவனைப் போல நிற்கின்றுய், தவிர உன் பெருமையால் உலகத்தை ஊழிக்காலத்து மறைத்து வைத்துக் கொண்டு, பின் வெளிப்படுத்துகின்றுய், இன்ன திறன் வாய்ந்த நீ ஆண் பகுதியைச் சேர்ந்தவனு? அல்லது பெண் பகுதியைச் சேர்ந்தவளா? அன்றி இரண்டும் கெட்ட அலிப்பகுதியா? எந்தப் பகுதியையுடையாய்?

அரும்சொற்பொருள்:— கண் என்பதற்கு இரண்டு பொருள் ஒன்று கண். இன்னென்று இடம். முன்னையது, காணும் ஆற்றல் வாய்ந்த உயிர்கட்கும், பின்னையது, ஏனைய பொருள்கட்கும் பொருந்தும். அப்பால் என்பது ஈண்டு அலியைச் சுட்டும்.

கவந்தன் வழிபாடு

ஆதிப் பிரமனும்நீ!
　　ஆதிப் பரமனும்நீ!
ஆதி எனும்பொருளுக்கு
　　அப்பால்உண் டாகிலும்நீ!
சோதிநீ! சோதிச்
　　சுடர்ப்பிழம்பு நீ!என்று
வேதம் உரைசெய்தால்
　　வெள்காரோ வேறுஉள்ளார்?

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— 'படைப்புக் கடவுளாகிய முதற் பிரமதேவனும் நீயே. அந்தப் பிரமனுக்கும் முதலாகவுள்ள பரம் பொருளும் நீயே. முதல் என்று சொல்லத்தக்க பொருளுக்கு முன்னும் ஒரு பொருள் இருக்குமாஞல் அந்தப் பொருளும் நீயே. ஒளியும் நீயே.' அந்த ஒளிக்கும் மேலான பேரொளிக் கூட்டமும் நீயே, என்ன மறைகள் எல்லாம் பேசுமாஞல், இவற்றைக் கேட்டு வேறுள்ள கடவுளர்களெல்லாம் வெட்கப்படமாட்டார்களா?

அரும்சொற்பொருள்:— சுடர்ப்பிழம்பு: ஒளிக்கூட்டம், வெள்குதல்: நாணப்படுதல்.

கவந்தன் வழிபாடு

எண்திசையும் திண்சுவரா,
ஏழ்ஏழ் நிலைவகுத்த
அண்டப் பெருங்கோயிற்கு,
எல்லாம் அழகுஉடைய
மண்டலங்கள் மூன்றின்மேல்
நின்று, மலராத
புண்டரிக மொட்டின்
பொகுட்டே புரை;அம்மா!

-கம்பர்.

(ஆரணிய காண்டம்)

கருத்து :— எட்டுத் திக்குகளையும் வலிமைவாய்ந்த சுவராக எழுப்பி, கீழே ஏழு உலகம், மேலே ஏழு உலகம் ஆகப் பதினான்கு அடுக்குகளை அமைத்துக் கட்டப்பெற்ற அண்டமாகிய பெரிய கோயிலுக்கு, எல்லாம் எழில் அமைந்த சூரியமண்டலம், சந்திரமண்டலம், நட்சத்திர மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்களுக்கும் மேல் நின்று, மலராது இருக்கின்ற உந்தித் தாமரைப் பூவின் மொக்குள் அல்லவா பிறப்பு இடமாக அமைந்திருக்கிறது.

அரும்சொற்பொருள் :— புண்டரிகம்: தாமரை. மொட்டு: மலராதது. பொகுட்டு: அதனுள் இருக்கும் விரை. புரை: இடம்.

விளக்கம் :— திசைகளும் பதினான்கு உலகங்களும் மதி கதிர் உடுக்களும் ஆகிய எல்லாம் தோன்றுதற்கும், இவற்றை எல்லாம் தோற்றுவித்த படைப்புக் கடவுளாகிய பிரமன் தோன்றுதற்கும் இடமாக இருந்தது திருமாலின் உந்திக் கமலம் என்பது கருத்து.

பாடல்–38

கவந்தன் வழிபாடு

மண்பால் அமரர்
　　வரம்புஆரும் காணாத,
எண்பால் உயர்ந்த,
　　எரிஓங்கு நல்வேள்வி
உண்பாய்நீ, ஊட்டுவாய்
　　நீ,இரண்டும் ஒக்கின்ற
பண்புஆர் அறிவார்
　　பகராய், பரமேட்டி !

-கம்பர்
(ஆரணிய காண்டம்)

கருத்து :— பரம்பொருளே ! பூமியில் தோன்றிய அமரராகிய அந்தணர் ஓம்புகின்ற எல்லையற்ற சிறப்புவாய்ந்த நெருப்பில் ஓங்கி வளர்கின்ற நல்ல அவியை உண்கின்றவனும் நீ; அவ்வேள்விக்குத் தலைமைதாங்கி ஊட்டுகின்றவனும் நீ; இத்தகைய மாறுபட்ட இரண்டு நிலையும் உன்னிடம் ஒத்திருக்கின்ற பண்பை யாரே அறிவார் ? நீயே இயம்புவாயாக !

அருஞ்சொற்பொருள்:— மண்பால் அமரர்: பூதேவராகிய அந்தணர். வரம்பு: எல்லை.

கவந்தன் வழிபாடு

நிற்கும் நெடுநீத்த
நீரில் முளைத்துஎழுந்த
மொக்குளே போல
முகுளித்த அண்டங்கள்
ஒக்கஉயர்ந்து உன்உளே
தோன்றி ஒளிக்கின்ற
பக்கம் அறிதற்கு
எளிதோ? பரம்பரனே!

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து :— மேலான பொருளே! நிற்கின்ற நீண்ட வெள்ள நீரில் தோன்றி எழுந்த குமிழிபோலக் குவிந்த உலகங்கள் பலவும் ஒருசேர ஓங்கிநின்று உன்னிடத்தே உண்டாகி, பிறகு உன்னுள்ளே மறைகின்ற இயல்பை யாரால் அறிய முடியும்?

அரும்சொற்பொருள் :— நீத்தம்: வெள்ளம். மொக்குள்: நீர்க்குமிழி, முகுளித்தல்: குவிதல். பக்கம்: (ஈண்டு) இயல்பு.

விளக்கம் :— உலகங்கள் எல்லாம் திருமாலாகிய கடலுள் தோன்றி அழியும் நீர்மேல் குமிழிக்கு உவமை சொல்லப் பெறுகின்றன.

கவந்தன் வழிபாடு

நின்செய்கை கண்டு
நினைந்தனவோ நீள்மறைகள்?
உன்செய்கை அன்னவைதாம்
சொன்ன ஒழுக்கினவோ?
என்செய்தேன் முன்னம்?
மறம்செய்கை எய்தினர்
பின்செல்வது இல்லாப்
பெருஞ்செல்வம் நீதந்தாய்!

கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— நீண்டமறைகள் உன்னுடைய செய்கைகளைப் பார்த்து, அச் செயல்களையே உலகத்திற்கு அறமாகக் கூற நினைந்தனவோ? அன்றி, உன்னுடைய செயல்கள் அந்த மறைகள் சொல்லிய நெறியில் நடக்கின்றனவோ? பாபவழியில் நின்றார் அடையமுடியாத பெரிய செல்வத்தை எனக்கு நீ அளித்தாய். இப்பேற்றை அடைவதற்கு நான் முன்னே என்ன புண்ணியம் செய்தேன்.?

அருஞ்சொற்பொருள்:— நீள்மறைகள்: விரிந்த வேதங்கள். அன்னவை வேதத்தைச் சுட்டும். மறம்: பாவம். பெருஞ்செல்வம்: சாப நீக்கம் பெற்றுக் கடவுளைக் கண்ட நிலை.

கவந்தன் வழிபாடு

'மாயப் பிறவி
　　மயல்நீக்கி, மாசுஇலாக்
காயத்தை நல்கித்
　　துயரின் கரைஏற்றி,
பேய்ஒத்தேன் பேதைப்
　　பிணக்குஅறுத்த எம்பெருமான்!
நாய்ஒத்தேன், என்ன
　　நலன்இழைத்தேன் நான்'என்றான்

-கம்பர்.
(ஆரணிய காண்டம்)

கருத்து:— பேயை நிகர்த்தவனாகிய என்னுடைய மாயம் வல்ல அரக்க உடம்பை அழித்து, என் மயக்கத்தைப் போக்கி, குற்றமற்ற உடம்பை எனக்கு அருளி, துன்பக் கடலினின்றும் என்னைக் கரைஏற்றி என் அறியாமை மாறுபாட்டைத் தொலைத்த எம் கடவுளே! நாய்க்குச் சமமான நான் உனக்கு என்ன நன்மையைச் செய்தேன், என்று இயம்பினான் கவந்தன்.

அரும்சொற்பொருள்:— மாசு: குற்றம். காயம்: உடம்பு. பிணக்கு: மாறுபாடு.

விளக்கம்:— இது கவந்தன் வழிபாட்டின் இறுதிப்பாடு.

பாடல்-42

கடவுள் வாழ்த்து

மூன்றுஉரு எனக்குணம்
மும்மை ஆம்முதல்,
தோன்றுஉரு எவையும்அம்
முதல ; சொல்லுதற்கு
ஏன்றுஉரு அமைந்தவும்,
இடையில் நின்றவும்,
ஊன்றுஉரு உணர்வினுக்கு
உணர்வும் ஆயினுன்.

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— முதற்கடவுள், மூன்று உருப்பெற்றது போல, குணங்களும் மூன்றைப்பெற்றிருக்கின்றது. உலகத்தில் தோன்றியிருக்கிற எல்லா வடிவங்களும், அக் கடவுளையே முதலாக உடையன. சொல்லத்தக்க பொருந்திய உணர்வு பெற்ற அனைத்து வடிவும், அவ் உருவின் இடையில் நின்ற உயிர்களும், அவ் உயிரில் தங்கிய அறிவுக்கு அறிவும் ஆயினுன் இறைவன்.

அரும்சொற்பொருள் :— மூன்று உரு: அரன், அரி, அயன். முக்குணம்: சாத்துவிகம், இராசதம், தாமதம். ஏன்ற: பொருந்திய.

விளக்கம் :— "ஆதிபகவன் முதற்றே உலகு" என்பது தமிழ் மறையல்லவா.

இராமன் இறைமையைத் தெளிதல்

தேறினன், ‘ அமரர்க்கு எல்லாம்
 தேவர்ஆம் தேவர் அன்றே,
மாறி,இப் பிறப்பில் வந்தார்
 மானிடர் ஆகி மன்னோ ?
ஆறுகொள் சடிலத் தானும்,
 அயனும்,என்று இவர்கள் ஆதி
வேறுஉள குழுவை எல்லாம்,
 மானுடம் வென்றது ’ அன்றே !

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— தேவர்கள் அனைவர்க்கும் இறைவராகிய கடவுளே. தேவப் பிறவியினின்றும் மாறி, மனித உடல் பெற்று, இந்தப் பிறவி எடுத்துவந்தார் ; ஆதலால் கங்கையைச் சடையில் தரித்த கடவுளும், பிரமனும் என்று சொல்லத் தக்க இவர்களை உள்ளிட்ட பிற எல்லாக் கூட்டத்தையும், மானுடப் பிறவி வெற்றிகொண்டது ’ என்றே தெளிந்தான். (சுக்கிரீவன்)

அரும்சொற்பொருள் — தேறுதல்: தெளிதல். மன் ஓ: அசை.

விளக்கம் :— இராமன் என்ற மானுடப் பிறவி தெய்வப் பிறவியை வென்றது என்பது கருத்து. இராமனைக் கண்டவுடன் சுக்கிரீவன் கூற்றாக வரும் மூன்று பாடல்களுள் தெய்வத்தன்மையை விளக்கும் இறுதிப் பாடல் இது.

பாடல்-44

சுக்கிரீவன் வழிபாடு

வையம்நீ! வானும்நீ!
மற்றும்நீ! மலரின்மேல்
ஐயன்நீ! ஆழிமேல்
ஆழிமா மாலும்நீ!
செய்யதீ அனைய அத்-
தேவும்நீ! நாயினேன்
உய்யவந்து உதவினாய்,
உலகம்முந்து உதவினாய்!

கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— இவ்வுலகமும் நீ. மேலுலகமும் நீயே. மற்றையவும் நீ.

பூவின் மேல் இருக்கின்ற ஐயனாகிய பிரமனும் நீ தான்.

பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கின்ற சக்கரம் கைக்கொண்ட பெரிய திருமாலும் நீயே.

செம்மை நிறமுடைய நெருப்பை ஒத்த அந்தக்கடவுளாகிய சிவபெருமானும் நீயே.

உலகத்தை முன்னே தந்தருளிய நீ, நாயனைய நான் கடைத்தேற எளிவந்து துணைசெய்தாய்.

அரும்சொற்பொருள் :— ஆழி : (முன்னையது) கடல். (பின்னையது) சக்கரம். செய்ய : சிவந்த. உய்ய : கடைத்தேற.

விளக்கம் :— மராமரப் படலத்தில் சுக்கிரீவன் இராமனது ஆற்றல் கண்டு வியந்து கூறுதல்.

இராமநாமப் பெருமை

மும்மைசால் உலகுக்கு எல்லாம்
மூலமந் திரத்தை, முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தை, தானே
இம்மையே, எழுமை நோய்க்கும்
மருந்தினை, 'இராமன்' என்னும்
செம்மைசேர் நாமம் தன்னை,
கண்களின் தெரியக் கண்டான்.

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— மூன்று என்னும் பெருமைகொண்ட உலகங்களுக்கு எல்லாம் மூலமந்திரமாகவும், முழுதும் தம்மை அடியார்களுக்கு அளிக்கும் ஒப்பற்ற பெரிய சொல்லாகவும் இந்தப் பிறவியிலேயே எழுபிறப்பின் பிணியையும் தீர்க்கும் அரு மருந்தாகவும் உள்ள செம்மை வாய்ந்த 'இராமன் என்னும் திருப்பெயரை, தன் மார்பினின்றும் பிடுங்கிய அம்பில், கண்களால் தெளிவாக வாலி கண்டான்.

அரும்சொற்பொருள் :— மும்மை : கீழ், நடு, மேல் என்ற மூன்று. சால்உலகு : பெருமைமிக்க உலகு. தமர் : அடியார். பதம் : மொழி.

வாலி வழிபாடு

ஏவுகூர் வாளியால்
எய்துநாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய்,
அறிவுதந்து அருளினாய்;
மூவர்நீ! முதல்வன்நீ!
முற்றும்நீ! மற்றும்நீ!
பாவம்நீ! தருமம்நீ!
பகையும்நீ! உறவும்நீ!

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து:— உன்னால் ஏவிச் செலுத்தப்பெற்ற கூரிய அம்பினால் நாயனைய அடியேன் உயிர்விடும் காலத்து, எனக்கு அறிவு அருளிக் கருணை செய்தாய்.

பிரமன், மால், சிவன் ஆகிய மும்மூர்த்தியும் நீயே.

மும்மூர்த்திகளுக்கும் முழுமுதல்வனும் நீயே.

காணப்படும் எல்லாப்பொருளும் நீயே. தோற்றப்படாத மற்றவையும் நீயே.

மறமும் நீ; அறமும் நீ.

மாற்றானும் நீ; அடைந்தானும் நீயே.

அருஞ்சொற்பொருள்:— வாளி: அம்பு. வேலை: பொழுது.

விளக்கம்:— இதுமுதல் நான்கு பாடல்கள் வாலி நல்லறிவு பெற்று இராமனைப் புகழ்தல்.

வாலி வழிபாடு

புரம்எலாம் எரிசெய்தோன்
முதலினோர் பொருஇலா
வரம்எலாம் உருவிஎன்
வசைஇலா வலிமைசால்
உரம்எலாம் உருவிஎன்
உயிர்எலாம் நுகரும்நின்
சரம்அலால் பிறிதுவேறு
உளதுஅரோ, தருமமே?

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— முப்புரங்கள் முழுதையும் எரித்த சிவபெருமான் முதலினோர் எனக்கு ஈந்த ஒப்பற்ற வரங்கள் எல்லா வற்றையும் ஊடுருவிச்சென்று, என்னுடைய பழுதில்லாத ஆற்றல் மிக்க மார்பிடங்களையெல்லாம் துளைத்து, என் உயிரை எல்லாம் உண்ட உன்னுடைய அம்பைத்தவிர அறம் என்ற வேறொரு பொருள் தனியாக உளதோ?

அரும்சொற்பொருள் :— எரி : நெருப்பு. பொருவு : ஒப்பு. உரம் : மார்பு. நுகருதல் : உண்டல். சரம் : அம்பு. பிறிது, வேறு, ஒரே பொருளன; வலியுறுத்தலில் வந்தன.

பாடல்-48

வாலி வழிபாடு

யாவரும் எவையும்ஆய்,
        இருதுவும், பயனுமாய்,
பூவும்நல் வெறியும்ஒத்து,
        ஒருவஅரும் பொதுமையாய்,
யாவன்நீ யாவதுஎன்று
        அறிவினர் அருளினர் ;
தாஅரும் பதம்எனக்கு
        அருமையோ? தனிமையோய்!

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— ஒப்பற்ற முதல்வனே! உயர்திணைப் பொருள்களாகவும், அஃறிணைகளாகவும், பருவங்களாகவும், பருவங்களின் பயனாகிய விளைபொருள்களாகவும் இருந்து, மலரையும் அதன் உள்ளே இருக்கும் மணத்தையும் நிகர்த்து, பிரித்து அறியமுடியாத பொதுத்தன்மை பொருந்தியவனே! நீ எத்தகையவன் என்பதையும் உன் இயல்பு எத்தன்மைத்து என்பதையும் என் உள்ளே தோன்றிய நல்ல அறிவினர் எனக்கு அறிவுறுத்தி விட்டார். எனவே குற்றமற்ற வீடு பேறாகிய பதவி இனி நான் பெறுதற்கு அருமையுடையதாகுமா?

அரும்சொற்பொருள்:— இருது: பருவகாலம். வெறி: மணம். ஒருவுதல் : பிரித்து அறிதல்.

பாடல்-49

வாலி வழிபாடு

உண்டுஎனும் தருமமே
உருவமா உடையநிற்
கண்டுகொண் டேன்,இனிக்
காணஎன் கடவெனே?
பண்டொடுஇன்று அளவுமே
என்பெரும் பழவினைத்
தண்டமே; அடியனேற்கு
உறுபதம் தருவதே!

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— நிலைத்திருப்பது எனக் கூறப்படும் அறத்தினையே திருமேனியாக உடைய உன்னைக் கண்டுகொண்டு விட்டேன். அறமே வடிவமான உன்னைக் கண்ட நான், இனி எதைக் காணப்போகின்றேன். அந்த நாள் தொட்டு இன்றுவரை நான் செய்த பழைய வினையின் பொருட்டு நீ அளித்த தண்டனையே, அடியேனுக்கு, தக்க பதவியைத் தருவதாகும்.

அருஞ்சொற்பொருள் :— தண்டம்: தண்டனை. உறுபதம்: பெரிய பதவி

விளக்கம் :— அம்பினால் தாக்குண்டதும் இராமனை ஏசிய வாலி, மெய்யுணர்வு பெற்று, வியக்கத்தக்க வகையில் பாராட்டுவதை மேற்கண்ட நான்கு பாடல்களும் பரக்கப் பகர்கின்றன.

பாடல்–50

சுக்கிரீவனிடம் வாலி கூறுதல்

மறைகளும், முனிவர் யாரும்,
　　மலர்மிசை அயனும், மற்றைத்
துறைகளின் முடிவும், சொல்லும்
　　துணிபொருள் துணிவில் தூக்கி,
அறைகழல் இராமன் ஆகி,
　　அறநெறி நிறுத்த வந்தது;
இறைஒரு சங்கை இன்றி
　　எண்ணுதி; எண்ணம் மிக்கோய்!

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— ஆய்ந்து எண்ணுவதில் மேம்பட்டவனாகிய தம்பி! வேதங்களும், இருடிகள் அனைவரும், பூமேல் உறையும் பிரமனும், ஏனைய அறிவுநூல் வழிகளின் முடிவும், அறுதியிட்டுச் சொல்லுகின்ற ஒப்பற்ற பொருள், எதிர்ப்பட்ட தீயவற்றையெல்லாம் துண்டு படுத்துகிற வில்லைத் தூக்கி, ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த 'இராமன்' என்னும் எழில் உருப்பெற்று, அறவழியை இவ்வுலகில் நிலைநாட்டத் தோன்றியது. ஒரு சிறிதும் ஐயம் இன்றி இதனைத் தெரிந்து கொள்.

அருஞ்சொற்பொருள் :— துணிவில் : துண்டிக்கின்றசிலை. அறை : ஒலி. இறை : சிறிது. சங்கை : ஐயம்.

விளக்கம் :— இதிலிருந்து நான்கு பாடல்கள் உயிர்போம் தறுவாயில் தம்பியாகிய சுக்கிரீவனைப் பார்த்து வாலி, இராமன் பெருமையை இயம்புதல்.

சுக்கிரீவனிடம் வாலி கூறுதல்

நிற்கின்ற செல்வம் வேண்டி
　　நெறிநின்ற பொருள்கள் எல்லாம்
கற்கின்ற, இவன் தன் நாமம்;
　　கருதுவ இவனைக் கண்டாய்;
பொன்குன்றம் அனைய தோளாய்!
　　பொதுநின்ற தலைமை நோக்கின்,
எற்கொன்ற வலியே சாலும்;
　　இதற்குஒன்றும் ஏது வேண்டா.

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து:— தங்க மலையை நிகர்த்த தோள்களையுடைய தம்பி! நல்வழியிலே நிற்கின்ற உயிர்ப் பொருள்கள் யாவும் என்றும் அழியாதிருக்கும் செல்வத்தை நாடி, இவனுடைய திருப்பெயரையே படிக்கின்றன. அவைகள் இவனைப்பற்றியே எப்பொழுதும் எண்ணுகின்றன. இதனை அறிந்து கொள்க. எல்லா உயிர்க்கும் பொதுவாக நிற்கின்ற இவனுடைய இறைமையைக் கூர்ந்து பார்த்தால் இவன் என்னைக் கொன்ற ஆற்றல் ஒன்றே போதும். இராமபிரானது ஆற்றலை அறிய வேறு காரணம் எதுவும் வேண்டாம்.

அருஞ்சொற்பொருள்:— நிற்கின்றசெல்வம்: வீடு பேருகிய பொருள். நெறி: வழி.

விளக்கம்:— சுக்கிரீவன் செந்நிறமுடையான் ஆதலின், 'பொற்குன்றம் அனைய தோளாய்' என்ருர்.

பாடல்-52

சுக்கிரீவனிடம் வாலி கூறுதல்

கைதவம் இயற்றி, யாண்டும்
      கழிப்பஅரும் கணக்குஇல் தீமை
வைகலும் புரிந்து ளாரும்,
      வான்உயர் நிலையை, வள்ளல்
எய்தவர் பெறுவர் என்றால்,
      இணைஅடி இறைஞ்சி, ஏவல்
செய்தவர் பெறுவது, ஐயா!
      செப்பல்ஆம் சீர்மைத்து ஆமோ?

-கம்பர்.

(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— ஐயனே! வஞ்சகத்தையே செய்து, எங்குச் சென்றும் தீர்த்துக்கொள்ள முடியாத மறச்செயல்களை நாள்தோறும் செய்தவர்களும், வள்ளலாகிய இராம பிரானால் அம்பெய்து கொல்லப்பெறுவரேல் வான்உலகத் துக்கும் மேலே இருக்கின்ற விட்டுலகத்தைப் பெறுவர் என்றால், அப்பெருமானுடைய இரண்டு திருவடிகளையும், ஏத்தி அவனுக்கு பணிசெய்கின்றவர் பெறும் பேறு இன்னது என்று சொல்லத்தக்க சிறப்பில் அமையுமா?

அரும்சொற்பொருள் :— கைதவம் : வஞ்சகம். யாண்டும் : எவ்விடத்தும். கழிப்ப அரும் :போக்கிக்கொள்ள முடியாத. வைகல் : நாள்தோறும்.

பாடல்-53

சுக்கிரீவனிடம் வாலி கூறுதல்

அருமைஎன், விதியி னூரே
　　உதவுவான் அமைந்த காலே?
இருமையும் எய்தி னுய்;மற்று
　　இனிச்செயற் பாலது எண்ணின்,
திருமறு மார்பன் ஏவல்
　　சென்னியில் சேர்த்தி, சிந்தை
ஒருமையின் நிறுவி, மும்மை
　　உலகினும் உயர்தி அன்றே.

கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— ஊழ்வினையாகிய கடவுளே துணைசெய்ய வந்திருக்கும்போது, அடைதற்கு அரிய பொருள் என்ன இருக்கின்றது? இம்மை, மறுமை என்ற இருமையின் பயன்களையும் நீ பெற்றாய். இனி நீ செய்யத்தக்கது யாது எனக் கருதுவாயானால், திருமகள் தங்கிய 'ஸ்ரீவத்ஸம்' என்னும் மறுவினைக்கொண்ட மார்பையுடைய இராமபிரானின் பணியைத் தலைமேல் தாங்கி, உள்ளத்தை அவன்மாட்டு ஒருவழிப்படுத்தி, மூன்று உலகங்களினும் உயர்வு அடைவாயாக!

அரும்சொற்பொருள் :— இருமை : இம்மை, மறுமை. சென்னி: தலை. மும்மை உலகு : கீழுலகு, நடுவுலகு, மேலுலகு.

அங்கதனிடம் வாலி கூறுதல்

தோன்றலும், இறத்தல் தானும்,
துகள் அறத் துணிந்து நோக்கின்
மூன்றுஉல கத்தி னோர்க்கும்,
மூலத்தே முடிந்த அன்றே?
யான் தவம் உடைமை யால்,இவ்
இறுதிவந்து இசைந்தது; யார்க்கும்
சான்றுஎன நின்ற வீரன்
தான்வந்து வீடு தந்தான்.

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— குற்றமில்லாமல் ஆய்ந்து பார்ப்போமானால், பிறத்தல், இறத்தல் ஆகிய இரண்டும், மூன்று உலகங்களில் வாழ்வோருக்கும் ஆதியாக வரையறுக்கப்பட்டனவே அல்லவா? நான் முன்னே செய்த தவத்தின் பயனால் எனக்கு இந்த நல்ல முடிவு வந்துசேர்ந்தது. அதனால்தான், எல்லா உயிர்கட்கும் எடுத்துக்காட்டும் சாட்சியாக விளங்கும் வீரனாகிய இராமபிரான். அவனாகவே வந்து, எனக்கு வீடுபேறு தந்து அருளினான்.

அரும்சொற்பொருள் :— துகள் : குற்றம். இறுதி : முடிவு.

விளக்கம் :— இதுவும் அடுத்த பாடலும் இறக்கும் தறுவாயில், மைந்தனாகிய அங்கதனிடம் வாலி கூறியன.

பாடல்—55

அங்கதனிடம் வாலி கூறுதல்

பாலமை தவிர் நீ; என்சொல்
பற்றுதி ஆயின், தன்னின்
மேல்ஒரு பொருளும் இல்லா
மெய்ப்பொருள், வில்லும் தாங்கி,
கால்தரை தோய நின்று,
கட்புலக்கு உற்றது; அம்மா!
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்துஎன வணங்கு, மைந்த!

-கம்பர்.
(கிட்கிந்தா காண்டம்)

கருத்து :— மகனே! சிறுபிள்ளைத்தனத்தை இனி விட்டுவிடு. என் சொல்லைத் தட்டாது நீ கேட்பது என்றால், தனக்கு மேல் மற்றொரு பொருள் இல்லாத உண்மைப் பொருள், கையில் வில்லைத் தூக்கி, கால் நிலத்தில்பட இராமபிரானாக நின்று கண்ணுக்குத் தோன்றுகின்றது. இது வியத்தற்குரியது. மயக்கத்தைத் தருகின்ற பிறவி என்ற பிணியைப் போக்க வல்ல மருந்து இப்பொருள் எனத் தொழுது உய்வாயாக!

அரும்சொற்பொருள் :— பாலமை : சிறுபிள்ளைத்தனம். தவிர்: விட்டுவிடு. தன்னின் : தனக்குமேல். தோய : படிய. மால் : மயக்கம்.

விளக்கம் :— 'தன் துணை ஒருவரும் தன்னின் வேறிலான்' என்று பிறிதோரிடத்துக் கூறுவர் கவிச் சக்கரவர்த்தி. 'தானலால் துணையும் இல்லை' என்பர் அப்பர் சுவாமிகள். இறக்கும் தந்தை மகனுக்கு இதற்குமேல் உறுதிப் பொருளை உரைக்கமுடியாது.

பாடல்–56

கடவுள் வாழ்த்து

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவுஎன, பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபாடு உற்ற வீக்கம்,
கலங்குவது எவரைக் கண்டால்?
அவர்என்ப, கையில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே,
மறைகளுக்கு இறுதி ஆவார்;

-கம்பர்.
(சுந்தர காண்டம்)

கருத்து :— பூமாலையில் தோன்றும் பொய்ப் பாம்பு என்று சொல்லும்படி, ஐந்து பூதங்களின் வேறுபட்ட கலப்பின் பெருக்கம், நீங்குதல் எவரைக் கண்டால் நிகழுமோ, அவரே கையில் வில்தாங்கி, இலங்கையில் போர்செய்தார் என்று மேலோர் கூறுவர். மறைகள் சொல்லும் முடிவுப் பொருளும் அவரேயாவார்.

அரும்சொற்பொருள் :— அலங்கல் : மாலை. வீக்கம் : பெருக்கம். கலங்குதல் : நீங்குதல்.

விளக்கம் :— பூமாலையைப் பாம்பு என்று கருதும் மயக்கம் போன்றது, பல்வகைப் பொருள்களுள்ளும் கலந்திருக்கும் கடவுளைக் காணாது, அவ் அப்பொருள்களே என்று கருதும் மயக்கம்.

பாடல்–57

இராவணனிடம் அனுமன் கூறுதல்

அனையவன் யாரென
அறிதி யாதியேல்,
முனைவரும், அமரரும்,
மூவர் தேவரும்,
எனையவர் எனையவர்
யாவர், யாவையும்,
நினைவுஅரும் இருவினை
முடிக்க, நின்றுளோன்.

-கம்பர்.
(சுந்தர காண்டம்)

கருத்து :— அன்னவன் (இராமபிரான்) யாவன் என நீ அறிந்துகொள்ள வேண்டுமானால், அறைகின்றேன். கேட்பாயாக! எல்லாக் கடவுளர்க்கும் முதலான கடவுளும், தேவரும், மூன்று இறையவர்களும், மற்றை யோர் எல்லோரும், பிறவும், எண்ணிப் பார்க்கவும் முடியாத இரண்டு வினைகளையும் முடிக்கவந்து நிற்கின்றவன் என்று கொள்க.

அரும்சொற்பொருள் :— முனைவன் : முதற் கடவுள். யாவை: அஃறிணைப் பொருள். இருவினை : நல்வினை, தீவினை.

விளக்கம் :— இதினின்றும் ஏழு பாடல், பிணிவீட்டுப் படலத்தில் இராவணனிடம் அனுமன் இராமன் பெருமையை இயம்பல்.

இராவணனிடம் அனுமன் கூறுதல்

ஈட்டிய வலியும், மேல்நாள்
இயற்றிய தவமும், யாணர்க்
கூட்டிய படையும், தேவர்
கொடுத்தநல் வரமும், கொட்பும்,
தீட்டிய வாழ்வும், எய்தத்
திருத்திய பிறவும் எல்லாம்,
நீட்டிய பகழி ஒன்றால்,
முதலொடும் நீக்க நின்றான்.

-கம்பர்.
(சுந்தர காண்டம்)

கருத்து :— நீ சேகரித்த ஆற்றலையும், முன்னாள் நீ செய்த தவத்தையும், புதிதாக நீ திரட்டிய படைகளையும், அமரர்கள் உனக்கு ஈந்த வரத்தையும், உன் கோட்பாட்டையும், நீ அமைத்துக்கொண்ட சிறந்த வாழ்க்கையையும் பொருந்துமாறு நீ அடைந்த பிற எல்லாவற்றையும், விடுகின்ற அம்பு ஒன்றினால், அடியோடு தொலைக்க நின்றவன் அவன் (இராமன்) என அறிக.

அரும்சொற்பொருள்:—யாணர்: புதிது. கொட்பு: கோட்பாடு. பகழி: அம்பு. முதலொடும்: அடியோடும்.

இராவணனிடம் அனுமன் கூறுதல்

தேவரும் பிறரும் அல்லன்;
திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன்
கைலைஅம் கிரியும் அல்லன்;
மூவரும் அல்லன்; மற்றை
முனிவரும் அல்லன்; எல்லைப்
பூவல யத்தை ஆண்ட
புரவலன் புதல்வன் போலாம்.

-கம்பர்
(சுந்தர காண்டம்)

கருத்து :— இராமன் உனக்குத் தோற்றுப்போன அமரர்களும் ஏனையோரும் அல்லன் ; திக்கு யானைகளல்லன் ; திசையைக் காக்கின்ற காவலர்களும் அல்லன் ; சிவபிரான் இருக்கின்ற கைலைமலையும் அல்லன் ; அயன், அரி, அரனும் அல்லன் ; ஏனைய இருடிகளும் அல்லன்; உலக முழுதையும் எல்லையாகக்கொண்டு ஆட்சி செலுத்திய சக்கரவர்த்தி திருமகன் எனத் தெரிக.

அரும்சொற்பொருள் :— திசைக்களிறு : திக்கு யானை. பூவலயம் : உலகம். புரவலன் : மன்னன்.

விளக்கம் :— இங்கே காட்டிய எல்லாம் இராவணனுக்குத் தோற்றவை.

பாடல்-60

இராவணனிடம் அனுமன் கூறுதல்

போதமும், பொருந்து கேள்விப்
புரைஅறு பயனும், பொய்தீர்
மாதவம் சார்ந்த தீரா
வரங்களும், மற்றும், முற்றும்
யாதுஅவன் நினைந்தான், அன்ன
பயத்தன; ஏது வேண்டின்,
வேதமும் அறனும் சொல்லும்
மெய்அற மூர்த்தி, வில்லோன்.

-கம்பர்.
(சுந்தர காண்டம்)

கருத்து :— அறிவும், பொருத்தமான குற்றமற்ற கேள்விப் பயனும், பொய்யில்லாத சிறந்த தவத்தினால் அடைந்த முடிவற்ற வரங்களும், ஏனைய யாவும், எதை அவன் (இராமன்) நினைந்தானோ, அப்பயனை அவனுக்கு நல்க வல்லன. சான்று வேண்டுமானால், மறைகளும், அறக் கடவுளும் பாராட்டிப் பேசும் உண்மையான அறவடிவினன், வில்லேந்திய அவ் இராமன் என உணர்க.

அரும்சொற்பொருள் :— போதம் : அறிவு. புரை : குற்றம். பயத்தன: பயன்தரவல்லன. ஏது: காரணம். வில்லோன்: இராமன்.

விளக்கம்:— 'பொய்தீர் ஒழுக்கம்' என்பது திருக்குறள். ஈண்டு 'பொய்தீர் மாதவம்' என்று புகலப்பெற்றது.

இராவணனிடம் அனுமன் கூறுதல்

காரணம் கேட்டி ஆயின்,
கடைஇலா மறையின் கண்ணும்
ஆரணம் காட்ட மாட்டா
அறிவினுக்கு அறிவும் அன்னான்;
போர்அணங்கு இடங்கர் கவ்வ,
பொதுநின்று, 'முதலே' என்ற
வாரணம் காக்க வந்தான்,
அமரரைக் காக்க வந்தான்.

-கம்பர்.
(சுந்தர காண்டம்)

கருத்து:— காரணம் கேட்பாயானால் முடிவில்லாத வேதங்களினிடத்து உள்ள உபநிடதங்களும் சொல்லமுடியாத அறிவுக்கு அறிவாக அன்னான் விளங்குகின்றான் என்பதை அறிவாய். போரிட்டுத் துன்பம் தந்த முதலை பற்றிக் கொள்ள, பொதுவாக நின்று 'மூலமே' என்று அழைத்த யானையைக் காக்கவந்த அக் கடவுளே, இன்று தேவரைக் காக்க இராமனாக வந்துள்ளான் என ஓர்க.

அருஞ்சொற்பொருள் :— ஆரணம்: (ஈண்டு) மறைகளின் உபநிடதங்கள். அணங்கு: துயரம். இடங்கர் : முதலை. கவ்வ: பற்றிக்கொள்ள. வாரணம்: யானை. (கஜேந்திரன்).

விளக்கம் :— 'மூலம்' என்று யானை அழைத்ததும் அருள வந்த காரணத்தால் இராமனே முழுமுதற் கடவுள் என்பது கருத்து.

பாடல்–62

இராவணனிடம் அனுமன் கூறுதல்

மூலமும் நடுவும் ஈறும்
இல்லதுஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த
காரணன், கைவில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும்
கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப்
பொருப்பும்விட்டு அயோத்தி வந்தான்.

-கம்பர்.

(சுந்தர காண்டம்)

கருத்து :— ஆதியும், இடையும், அந்தமும் இல்லாத, ஒரு மூன்றான இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற காலங்களும், அளவும் கடந்துநின்ற முதற் காரணனாகிய கடவுள், கையிலே வில்லைத் தூக்கிக்கொண்டு, திரிசூலத்தையும், சக்கரம், சங்கையும், கமண்டலத்தையும் நீக்கி, பழமையான ஆலமா மரத்தின் இலையையும், வெண் தாமரைப் பூவையும், வெள்ளி மலையையும் விட்டு, அயோத்தி நகரத்திலே வந்து பிறந்தான்.

அரும்சொற்பொருள் :— சூலம் : திரிசூலம். திகிரி: சக்கரம். கரகம்: கமண்டலம். தொல்லை: பழமை. ஆலம்: ஆலிலை. மலர்: (ஈண்டு) வெண்தாமரைப் பூ.

விளக்கம்:— சூலம் சிவபிரானுக்குரியது; சங்கு, சக்கரம் திருமாலுக்குரியன. கமண்டலம் பிரமனுக்குரியது. ஆலம், மலர், வெள்ளிப்பொருப்பு, இவை முறையே அரி, அயன், அரன் தங்குமிடங்கள். இவற்றையெல்லாம்விட்டு வந்தான். எனவே இராமன் மும்மூர்த்திகளின் வடிவம் என்பது பெறப்பெற்றது.

பாடல்–63

இராவணனிடம் அனுமன் கூறுதல்

அறம்தலை நிறுத்தி, வேதம்
அருள்சுரந்து அறைந்த நீதித்
திறம்தெரிந்து, உலகம் பூணச்
செந்நெறிச் செலுத்தி, தீயோர்
இறந்துஉக நூறி, தக்கோர்
இடர்துடைத்து, ஏக, ஈண்டுப்
பிறந்தனன், தன்பொற் பாதம்
ஏத்துவார் பிறப்பு அறுப்பான்.

-கம்பர்.
(சுந்தர காண்டம்)

கருத்து :— தன்னுடைய பொன்னார் திருவடிகளை வழிபடுவார் பிறப்பை அறுக்கும்பொருட்டு, அறத்தை நிலைநிறுத்தி, மறைகள் கருணைப்பெருக்கால் அருளிய நீதித் தகுதியை அறிந்து, உலகம் அவற்றை அடையச் செம்மையான வழியிலே செலுத்தி, தீமையுடையார் பட்டு ஒழிய அழித்து, சான்றோரின் துன்பத்தைப் போக்கி, தன் பழைய நிலைக்குச் செல்ல, இவ்வுலகத்தில் தோன்றினான் இராமன் எனத் தெளிவாயாக!

அருஞ்சொற்பொருள் :— தலைநிறுத்தி: நன்கு நிலைபெறச் செய்து. இறந்து உக: அடியோடு ஒழிய. நூறி: அழித்து. ஏக: பழையநிலைக்குச் செல்ல.

விளக்கம் :— பழைய நிலைக்குச் செல்லுதல். பரமபதத்தை ஆளப்புகுதல்.

பாடல்–64

கடவுள் வாழ்த்து

ஒன்றே என்னின் ஒன்றேஆம்;
பலஎன்று உரைக்கின் பலவேஆம்;
அன்றே என்னின் அன்றேஆம்;
ஆம்என்று உரைக்கின், ஆமேஆம்;
இன்றே என்னின், இன்றேஆம்;
'உளது'என்று உரைக்கின், உளதேஆம்;
நன்றே, நம்பி குடிவாழ்க்கை!
நமக்குஇங்கு என்னே பிழைப்புஅம்மா!

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— கடவுளை ஒன்று என்று சொன்னால் ஒன்றேயாகும்; ஒன்றல்ல பல என்று சொன்னால் பலவுமாகும்.

கடவுள் அது அன்று, என்று உரைத்தால் அது அல்லவாகவே இருக்கும். அதுதான், என்று உரைத்தால் அதுவேயாகும்.

கடவுள் இல்லை, என்று இயம்பினால் இல்லாமலேயிருக்கும். இருக்கிறது, என்று இயம்பினால் இருக்கவே செய்யும்.

கடவுளுடைய குடிவாழ்க்கையே இவ்வளவு நன்றாக அமையுமானால், நம்முடைய பிழைப்பெல்லாம் எப்படி நடக்கும்?

அரும்சொற்பொருள்:— நம்பி: சிறந்தவன். ஈண்டுக் கடவுளை உணர்த்திற்று. பிழைப்பு: வாழ்க்கைத்தன்மை.

விளக்கம் :— 'ஒன்று'க்குப் 'பல'வும், 'அன்று'க்கு 'ஆமு'ம் 'இன்று'க்கு 'உளது'ம் எதிர்மறை.

பிரகலாதன் குருவுக்கு அறிவுறுத்தல்

ஆரைச் சொல்லுவது, அந்தணர்
அருமறை அறிந்தோர்,
ஓரச் சொல்லுவது எப்பொருள்,
உபநிட தங்கள்,
தீரச் சொல்பொருள் தேவரும்
முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவது அல்லது
பிறிதும்ஒன்று உளதோ?

-கம்பர்.
(யுத்த காண்டம்

கருத்து:— அருமையான வேதங்களை உணர்ந்த அந்தணர்கள் தேர்ந்து முடிவுகட்டி யாரைச் சொல்லுகின்றார்களோ, உபநிடதங்கள் எந்தப் பொருளைப் பேசுகின்றதோ, அமரரும் இருடிகளும் முடிவாக எந்தப்பொருளை இயம்புகின்றார்களோ அந்தப் பெயரை நான் சொல்லுவதைத் தவிர, வேறு எதைச் சொல்ல இருக்கின்றது.

அரும்சொற்பொருள் :— ஆரை : யாரை, ஓர : ஆராய்ந்து முடிவாக. தீர : உறுதியாக.

விளக்கம் :— இதுமுதல் ஐந்து பாடல்கள் பிரகலாதன் ஆசிரியருக்கு அறிவுறுத்துவது.

பாடல்-66

பிரகலாதன் குருவுக்கு அறிவுறுத்தல்

வேதத் தானும்நல் வேள்வியி
னுனும், மெய்உணர்ந்த
போதத் தானும்அப் புறத்துள
எப்பொரு ளானும்,
சாதிப் பார்பெறும் பெரும்பதம்
தலைக்கொண்டு சமைந்தேன்;
ஓதிக் கேட்பது பரம்பொருள்
இன்னம்ஒன்று உளதோ?

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— மறைகளைக் கொண்டும், நல்ல வேள்விகளைச் செய்தும், மெய்அறிவு உணர்ச்சியினுலும், ஏனைய எல்லா வற்ருலும் முயன்று அடைகின்றவர் ஓதும் "நாராயணுய" என்ற பெரிய சொல்லை, உச்சிமேற்கொண்டு நின்றேன். சொல்லிக் கேட்கத்தக்க பரம்பொருள் இதைத் தவிர வேறென்று இருக்கிறதா?

அரும்சொற்பொருள் :— போதம் : அறிவு. சாதித்தல் : முயன்று அடைதல். பெரும்பதம் : பெரிய சொல். (நாராயணுய நம:). பெரிய பதவியாகிய பரமபதம் என்பதும் பொருந்தும்.

பிரகலாதன் குருவுக்கு அறிவுறுத்தல்

காடு பற்றியும் கனவரை
பற்றியும், கலைத்தோல்
மூடி முற்றியும் முண்டித்தும்,
நீட்டியும், முறையால்
வீடு பெற்றவர், 'பெற்றதின்
விழுமிது'என்று உரைக்கும்
மாடு பெற்றனென்; மற்றுஇனி
என்பெற வருந்தி?

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— காட்டுக்குச் சென்றும், முகில் தவழும் மலைகளில் ஏறியும், மான்தோலால் உடலை முற்ற மறைத்துக்கொண்டும், தலையை மொட்டையடித்துக் கொண்டும், சடை வளர்த்துக்கொண்டும், இன்ன பல வகையால் வீடு பேறு அடைந்தவர் எய்திய பயனைவிட, மேம்பட்டது என்று சொல்லக்கூடிய செல்வத்தை நான் அடைந்தேன். இதற்குமேல் உடலை வருத்தி யான் பெறத்தக்கது என்ன இருக்கிறது?

அரும்சொற்பொருள் :— கனம் : மேகம். கலை : மான். முண்டித்தல் : மழித்தல். நீட்டல் : சடைவளர்த்தல். விழுமிது : மேம்பட்டது. மாடு : செல்வம். வருந்தி : மெய் வருந்தி.

விளக்கம் :— விடுபேறு அடைதற்கு உடம்பை வருத்தித் தவம் செய்வாரின் பல நிலையையும் இங்குப் பேசப் பெற்றன. 'பொருப்படைந்து தங்கள் புலனைந்தும் செற்று நெருப்படைந்து, நீரடைய வேண்டா' என்ற பெருந் தேவனார் பாடல் இதனோடு ஒத்தது.

பிரகலாதன் குருவுக்கு அறிவுறுத்தல்

செவிக ளால்பல கேட்டிலர்
ஆயினும், தேவர்க்கு
அவிகொள் நான்மறை அகப்பொருள்
புறப்பொருள் அறிவார்;
கவிகள் ஆகுவார்; காண்குவார்,
மெய்ப்பொருள்; காலால்
புவிகொள் நாயகற்கு அடியவற்கு
அடிமையின் புக்கார்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— திருவடியால் உலகத்தை அளந்த தலைவனாகிய கடவுளின் அடியார்கட்கு அடிமைசெய்யப் புக்க அன்பர்கள், தாங்கள் பல நூல்களைக் கேட்காவிட்டாலும் கூட கடவுளர்கட்கு அவிரப்பாகம் கொடுக்கின்ற நான்கு வேதங்களின் உட்பொருளையும், வெளிப்பொருளையும், அறிய வல்லவராவார்; அன்றி, பாடல்கள் செய்யவல்ல புலவரும் ஆவார்; அன்னார் உண்மைப் பொருளையும் அறியும் ஆற்றல் பெறுவார்.

அருஞ்சொற்பொருள் :— அவி : வேள்வியில் இடும் பொருள்.

விளக்கம் :— இறைவன் அடியார்க்கு அடியவர், கேள்வி அறிவு இல்லாரேனும், இறைத்தன்மையை உணரும் ஆற்றல் பெறுவார் என்பது கருத்து.

பிரகலாதன் குருவுக்கு அறிவுறுத்தல்

எனக்கும், நான்முகத்து ஒருவற்கும்
யாரினும் உயர்ந்த
தனக்கும், தன்நிலை அறிவுஅரும்
ஒருதனித் தலைவன்,
மனக்கு வந்தனன்; வந்தன,
யாவையும்; மறையோய்!
உனக்கும் இன்னதின் நல்லதுஒன்று
இல்என உரைத்தான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— மறைகள் வல்லவனே! எனக்கும் நான்முகங்களைக் கொண்ட ஒப்பற்ற பிரமனுக்கும், எல்லாரினும் உயர்ந்த பரம்பொருளாகிய தனக்கும், தன்னுடைய தகுதியைத் தானே அறிய முடியாதவனாகிய, ஒப்பற்ற பெருந்தலைவனாகிய நாராயணன், என் மனத்திலே வந்து பொருந்தியிருக்கிறான். அதனால் எல்லாம் எனக்குக் கிட்டிவிட்டது. உனக்கும் இந்தப் பரம்பொருளைக் காட்டிலும் மேம்பட்ட ஒரு பொருள் இல்லை என்று உணர்க, எனச் சொன்னான் பிரகலாதன்.

அரும்சொற்பொருள் :— மனக்கு : மனத்துக்கு என்பதின் திரிபு.

விளக்கம் :— 'மறையோய்' என்று குருவை அழைப்பது மறைகளை உணர்ந்த உனக்கு இது தெரியவில்லையா என்று கேட்பது போல் இருக்கிறது.

பாடல்-70

பிரகலாதன் தந்தைக்கு கூறுதல்

சுருதி யாவையும் தொடங்குறும்
எல்லையில் சொல்லும்
ஒருவன், யாவர்க்கும் நாயகன்,
திருப்பெயர் உணரக்
கருதக் கேட்டிடக் கட்டுரைத்து
இடர்க்கடல் கடக்க
உரிய, மற்றுஇதின் நல்லதுஒன்று
இல்என உரைத்தான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— மறைகள் முழுதும் தொடங்கும்போது சொல்லத் தக்க ஒப்பற்றவன், எல்லோர்க்கும் தலைவன், நாராயணன் என்ற அவன் திருப்பெயரே, அறிந்து கொள்ள, நினைக்க, கேட்க, பாராட்டிப் பேசித் துன்பக் கடலை நீந்த உரிமை உடையது; இந்தப் பெயரைவிட மேம்பட்ட பெயர் வேறொன்றும் இல்லை என்றான் பிரகலாதன்.

அருஞ்சொற்பொருள் :— சுருதி : மறை. எல்லை : அளவு. கட்டுரைத்தல் : பாராட்டிப்பேசுதல்.

விளக்கம் :— இது முதல் பதினொரு பாடல் பிரகலாதன் அறிவுறுத்துதல்.

பாடல்-71

நாராயணநாமத்தின் பெருமை

காமம் யாவையும் தருவதும்,
அப்பதம் கடந்தால்
சேம வீடுஉறச் செய்வதும்,
செந்தழல் முகந்த
ஓம வேள்வியின் உறுபயன்
உய்ப்பதும், ஒருவன்
நாமம்; அன்னது கேள்; நமோ
நாராய ணாய!

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— விரும்பிய எல்லாவற்றையும் ஈவதும், விருப்ப நிலையைத் தாண்டிவிட்டால் அழிவில்லாத வீடு பேற்றை அடையச் செய்வதும், சிவந்த நெருப்பில் அவிர்ப்பாகங் களை இட்டுச் செய்கின்ற வேள்விகளுக்குரிய மேம்பட்ட பதவிகளை அடையச் செய்வதும் ஒப்பற்றவனுடைய திருப்பெயர்; அது எது என்று கேட்கின்றாயா? அதுவே "நமோ நாராயணாய".

அரும்சொற்பொருள் :— காமம் : விருப்பம். சேமம் : அழி வில்லாதது. உறுபதம் : சிறந்த பதவி.

பாடல்-72

நாராயணநாமத்தின் பெருமை

மண்ணின் நின்றுமேல் மலர்அயன்
உலகுஉற வாழும்
எண்இல் பூதங்கள், நிற்பன,
திரிவன, இவற்றின்
உள்நி றைந்துள கரணத்தின்
ஊங்குஉள உணர்வும்,
எண்ணு கின்றதுஇவ் எட்டுஎழுத்-
-தே ;பிறிது இல்லே.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— பூவுலகம் முதல் மேல் உலகமாகிய மலரில் வாழும் பிரமனது உலகம் வரையும் வாழ்கின்ற கணக்கற்ற இயங்கும் பொருள், இயங்காப் பொருள் ஆகிய எல்லாவற்றுள்ளும் நிறைந்து உள்ளத்தின் கண்ணே பொருந்தியிருக்கின்ற அறிவிஞல், உணரத்தக்கது இந்த எட்டெழுத்தைத் தவிர வேறு இல்லே.

அரும்சொற்பொருள்:— பூதங்கள் : பொருள்கள், கரணம் : மனம், எட்டு எழுத்து : நாராணுய நம:

பாடல்–73

நாராயணநாமத்தின் பெருமை

முக்கண் தேவனும் நான்முகத்து
ஒருவனும், முதலா,
மக்கள் காறும்இம் மந்திரம்
மறந்தவர் இறந்தார்;
புக்குக் காட்டுவது அரிது; இது
பொதுவுறக் கண்டார்,
ஒக்க நோக்கினர்; அல்லவர்
இதன் நிலே உணரார்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— மூன்று கண் பெற்றவனுகிய சிவனும், நான் முகத்து ஒருவனுகிய பிரமனும் முதலாக உலகத்து உள்ள மக்கள் ஈருக, "நாராயணுய" என்னும் இம்மந்திரத்தை மறந்தவர் இறந்தவரேயாவார். இம் மந்திரத்தை உள் நுழைந்து விளக்கிக்காட்டுவது அருமையாகும். இதனை நடுநிலே பொருந்தப் பார்க்கும் தன்மையுள்ள ஞானிகள் (இதன்) பெருமையோடு அறிவார். ஏனையோர் இதன் சிறப்பை உணரமாட்டார்.

அரும்சொற்பொருள்:— புக்கு: நுழைந்து. பொதுவுற: நடுவாக.

விளக்கம்:— நாராயண நாமத்தை தேவர்களும் மனிதர் களும், மறந்தார் இறந்தவரே யாவார். அதன் சிறப்பை அறிந்தவர் அறிஞர்கள்; அல்லாதார், அல்லாதார் என்க.

பாடல்–74

நாராயணநாமத்தின் பெருமை

தோற்றம் என்னும்அத் தொல்வினைத்
தொடுகடல் சுழிநின்று
ஏற்று நன்கலன்; அருங்கலன்
யாவர்க்கும்; இனிய
மாற்ற மங்கலம்; மாதவர்
வேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொருள்; திருந்தமற்று
இதின்இல்லை சிறந்த.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— இந்த திருத்தமான 'நாராயணாய' மந்திரத்தை விடச் சிறந்த மற்றொன்று இல்லை; இது பிறவியாகிய, அந்தப் பழையவினையால் உண்டான, கடல் சுழியினின்றும் கரையேற்றுகின்ற நல்லதெப்பம்; எல்லோருக்கும் விரும்பி அணியத்தக்க அரிய ஆபரணம்; இனிமையான மங்கலச் சொல்; சிறந்த தவசிகள் போற்றும் மறைகளால் சொல்லப்பட்ட தெளிந்த எல்லையின் உண்மைப் பொருள்.

அரும்சொற்பொருள்:— தோற்றம்: பிறவி. கலன் (முன்னையது) மரக்கலன்; (பின்னையது) ஆபரணம். மாற்றம்: சொல். மங்கலம்: நலம்பயத்தல். வரம்பு: எல்லை. தேற்றம்: தெளிவு.

விளக்கம்:— 'இது' என்பது திரு எட்டெழுத்தைச் சுட்டுகின்றது. 'திருந்த' என்பதை முதலில் எடுத்துப் பொருள் கொள்க.

பாடல்–75

பிரகலாதன் தந்தைக்கு அறிவுறுத்தல்

தன்னுளே உலகங்கள்
எவையும் தந்து,அவை
தன்னுளே நின்று,தான்
அவற்றுள் தங்குவான்;
பின்இலன், முன்இலன்,
ஒருவன்; பேர்கிலன்;
தொல்நிலை ஒருவரால்
துணியற் பாலதோ?

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— இணையற்ற முதற்கடவுள் தன்னுள் இருந்து உலகங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கி, அவ் உலகத்துக்குள்ளே தானும் நின்று அதோடு அன்றி, அவ் எல்லா வடிவங்களுள்ளும் தான் தங்கிஇருப்பான். அவன் பின்னும் முன்னும் இல்லாதவன். மாறுபாடு இல்லாதவன். அவ் இறைவனுடைய பழைய தன்மையை துணிந்து சொல்ல எவரால் முடியும்?

அரும்சொற்பொருள்:— பேர்தல்: மாறுபடுதல். தொன்மை: பழமை.

விளக்கம்:— "உரைசேரும் எண்பத்து நான்குநூறு
ஆயிரமாம் யோனிபேதம்,
நிரைசேரப் படைத்துஅவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்ருன்......"
என்பர் திருஞானசம்பந்தர்.

பிரகலாதன் தந்தைக்கு அறிவுறுத்தல்

கண்ணினும் கரந்துளன் ;
கண்டு காட்டுவார்
உள்நிறைந் திடும்உணர்வு
ஆகி ; உண்மையால்,
மண்ணினும், வானினும்,
மற்றை மூன்றினும்
எண்ணினும் நெடியவன்
ஒருவன், எண் இலான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— தன்னைப் பற்றி நினைக்கின்றவர்களுடைய எண்ணத்துக்கும் அப்பாற்பட்டு நீண்டிருக்கின்றவனாகிய ஒப்பற்றவன்; அவன் கணக்கற்றவன்; காண்பார் கண்களுள்ளும் மறைந்திருக்கின்றான். அவனைக்கண்டு பிறருக்குக் காட்டுகின்றவருடைய உள்ளத்துள்ளே அறிவுக்கு அறிவாகி நிறைந்திருக்கின்றான். நிலத்திலும், விண்ணிலும், நீர், தீ, காற்று என்ற ஏனைய மூன்றினும் அவன் கலந்திருப்பது உண்மையாகும்.

அரும்சொற்பொருள் :— கரத்தல் : மறைத்தல். உள் : உள்ளம். உணர்வு . அறிவு. உண்மை : மெய்யாகும். ஆல் : அசை.

பிரகலாதன் தந்தைக்கு அறிவுறுத்தல்

ஓம்எனும் ஓர்எழுத்து
அதனின் உள்உயிர்
ஆம் ;அவன், அறிவினுக்கு
அறிவும் ஆயினன் ;
தாமமூ உலகமும்
தழுவிச் சார்தலால்,
தூமமும் கனலும்போல்
தொடர்ந்த தோற்றத்தான்.

-கம்பர்
(யுத்த காண்டம்)

கருத்து :— ஓம் என்று சொல்லக்கூடிய பிரணவத்தின் அ, உ, ம், என்ற மூன்று எழுத்துள் ஒப்பற்ற எழுத்தாகிய அகரத்தின் உள் உயிராவான்; அக் கடவுள் அறிவுக்கு அறிவாக அமைந்திருக்கின்றான்; பரந்த மூன்று உலகங்களும் கலந்து பொருந்துதலால், புகையும் நெருப்பும், போல, பரவியிருக்கின்ற தன்மையுடையான் அவன்.

அரும்சொற்பொருள் :— தாமம் : பரந்தஇடம். தூமம் : புகை. கனல்: நெருப்பு.

பாடல்–78

பிரகலாதன் தந்தையிடம் கூறுதல்

உலகுதந் தானும், பல்வேறு
　　உயிர்கள்தந் தானும், உள்உற்று
உலைவுஇலா உயிர்கள் தோறும்.
　　அங்குஅங்கே உறைகின் றானும்,
மலரினில் மணமும், எள்ளில்
　　எண்ணெயும் போல, எங்கும்
அலகில்பல் பொருளும் பற்றி
　　முற்றிய அரிகாண், அத்தா!

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— தந்தையே! உலகத்தைத் தோற்றுவித்தவனும், பலவகையான உயிர்களைப் படைத்தவனும், கேடற்ற அந்த உயிர்களின் உள்ளே பொருந்தி அங்கங்கே தங்கியிருப்பவனும், பூவினுள்ளே நாற்றமாகவும். எள்ளுக்குள் எண்ணெய் போலவும் யாண்டுமுள்ள கணக்கற்ற பல பொருள்களிலும், பரவி நிறைந்திருக்கின்றவனும் திருமாலே என அறிக.

அரும்சொற்பொருள் :— உலைவு : கெடுதல். உயிர்கட்கு அழிவில்லையாதலின் 'உலைவு இலா உயிர்கள்' எனக் கூறப்பெற்றது. அலகு : கணக்கு. முற்றிய : நிறைந்த. அரி : திருமால். காண், முன்னிலை அசை. அத்தன் : தந்தை.

விளக்கம் :— 'உயிர்கள் தோறும் அங்கங்கே நிறைகின்றான்' என்பதும் 'உயிர்க்கு உயிராய் அங்கங்கே நின்றான்' என்ற சம்பந்தர் பாடலும் ஒக்கும்.

பிரகலாதன் தந்தைக்குக் கூறுதல்

'சாணிலும் உளன்;ஓர் தண்மை,
அணுவினைச் சதகூறு இட்ட
கோணினும் உளன்;மா மேருக்
குன்றினும் உளன்;இந் நின்ற
தூணினும் உளன்;நீ சொன்ன
சொல்லினும் உளன்;இத் தன்மை
காணுதி விரைவின்' என்றான்;
'நன்று' எனக் கனகன் நக்கான்

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— 'இறைவன் ஒருசாண் இடத்திலும் இருக்கின்றான்; ஒரு சிறிய அணுவினை நூறாகப் பகுக்கப்பட்ட கோணிலும் இருக்கின்றான்; பெரிய மேருமலையிலும் இருக்கின்றான்; இதோ நிற்கின்ற தூணிலும் இருக்கின்றான்; நீ இப்போது சொன்ன சொல்லிலும் இருக்கின்றான்; இந்த உண்மையை நீ விரைந்து காண்பாய், என்றான் பிரகலாதன். 'ஆகா! நல்லது!' என்று சொல்லிச் சிரித்தான் இரணியன்.

அருஞ்சொற்பொருள் :— அணு : மிகச்சிறிய பொருள். சதம்: நூறு. அதில் நூறு பங்கு ஒன்றைக் கோண் என்று குறிக்கின்றார். கனகன் : இரணியன். கனகம் என்று சொல்லுக்குத் தங்கம் என்று பொருள். இரணியன் : பொன்நிறமானவன்.

பிரகலாதன் தந்தைக்குக் கூறுதல்

‘என்உயிர் நின்னால் கோறற்கு
　　எளியதுஒன்று அன்று; யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட
　　இடம்தொறும் தோன்றான் ஆயின்,
என்உயிர் யானே மாய்ப்பல்;
　　பின்னும்வாழ்வு உகப்பல் என்னின்,
அன்னவற்கு அடியேன் அல்லேன்’
　　என்றனன், அறிவின் மிக்கான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— அறிவில் மேம்பட்டவனாகிய பிரகலாதன், ‘நின்னைக்கொன்று உன் உடலையும் தின்பென்’ என்று சினந்து கூறிய தந்தையைப் பார்த்து, ‘என்னுடைய உயிர் உன்னால் கொல்லக்கூடிய அவ்வளவு எளிமை யுடையது ஒன்றல்ல; என்னால் உன்முன்பு சொல்லப்பட்ட அந்தக் கடவுள், நீ தொட்ட இடங்களிலெல்லாம் வெளிப்பட வில்லையானால், என்னுடைய உயிரை யானே மாய்த்துக் கொள்வல்; அங்ஙனமின்றி, பின்னரும் இவ்வுலக வாழ்வை விரும்பி ஏற்பேனானால், அந்தப் பரம்பொருளுக்கு நான் அடியேன் ஆக மாட்டேன்’ என்று கூறினான்.

அரும்சொற்பொருள் :— கோறல்: கொல்லுதல். மாய்ப்பல்: அழித்துக் கொள்வேன். உகத்தல்: மகிழ்தல்.

பாடல்–81

நரசிங்கத்தைப் பிரமன் வழிபடல்

தன்னைப் படைத்ததுவும்
தானே எனும்தன்மை
பின்னைப் படைத்ததுவே
காட்டும்; பெரும்பெருமை
உன்னைப் படைத்தாய்நீ
என்றால் உயிர்படைப்பான்
என்னைப் படைத்தாய்நீ
எனும்இதுவும் ஏதுஆமோ?

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— உன்னை நீயே முதலில் படைத்துக் கொண்டாய். என்ற உண்மையைப் பின்பு, அதாவது இப்பொழுது, இந்தத் தூணிலிடத்தே நரசிங்கமாக உன்னை நீ படைத்துக்கொண்டதே சான்றாகக் காட்டும். பெரிய பெருமை வாய்ந்த உன்னையே நீ படைத்துக்கொண்டாய் என்றால், உலகத்துள்ள பிற உயிர்களைப் படைக்கும் பொருட்டு, என்னை நீ படைத்தாய் என்று சொல்லுகின்ற இப் பேச்சு எதன்பாற் பட்டது?

அரும்சொற்பொருள் :— பின்னைப்படைத்து: நரசிங்கத்தின் தோற்றம். பெரும் பெருமை: மிக்கமேம்பாடு. படைப்பான்: படைக்கும் பொருட்டு. ஏதுஆமோ : எத்தன்மையைச் சேர்ந்ததோ?

விளக்கம் :— உன்னையே படைக்கும் ஆற்றல் வாய்ந்த நீ, பிற உயிர்களையெல்லாம் படைக்க முடியாதா? அதற்காக என்னைப்படைத்தாய் என்பது பொருத்தமா என்று பிரமன் கேட்கின்றான். இது முதல் நான்கு பாடல்கள் பிரமன் நரசிங்கத்தை வழிபடல்.

பாடல்–82

நரசிங்கத்தைப் பிரமன் வழிபடல்

பல்ஆ யிரகோடி
அண்டம், பனிக்கடலுள்
நில்லா தமொக்குள்என
தோன்றுமால், நின்னுழையே;
எல்லா உருவமுமாய்
நின்றக்கால், இவ்உருவம்
வல்லே படைத்தால்,
வரம்புஇன்மை வாராதோ?

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— பல ஆயிரம் கோடி அண்டங்களும், குளிர்ந்த கடலுள் தோன்றி அழியும் நீர்க்குமிழிபோல் உன்னிடத்தே பிறக்கும். எல்லா வடிவங்களுள்ளும் நீயே இருக்கும் போது, அவ்வடிவங்களையெல்லாம் அழிக்கக் கூடிய இந்த நரசிங்க வடிவத்தை இவ்வளவு விரைந்து நீயே உண்டாக்கிக் கொள்வாயானுல், விதித்த எல்லையைக் கடந்தாய் என்ற குற்றம் உனக்கு வாராதோ?

அரும்சொற்பொருள்;— பனி: குளிர்ச்சி. நில்லாத: நிலைத்து நிற்காத. மொக்குள் : நீர்க்குமிழி. உழை : இடம். இவ்வுருவம் : நரசிங்க வடிவம். வல்: விரைவு. வரம்பு: எல்லை.

நரசிங்கத்தைப் பிரமன் வழிபடல்

பேரை ஒருபொருட்கே
பல்வகையால் பேர்த்துஎண்ணும்
தாரை நிலையை;
தமியை; பிறர்இல்லை;
யாரைப் படைக்கின்றது?
யாரை அளிக்கின்றது?
ஆரைத் துடைக்கின்றது?
ஐயா! அறியேமால்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— ஐயனே! ஒருபொருளுக்கே பலவகையாக வெவ்வேறு பெயர் கொடுத்து, வேறுபடுத்தி எண்ணத்தக்க ஒழுங்கு நிலையை நீ உடையாய்; தனிமுதற்பொருளாகவும் நீ இருக்கின்றாய். அம்முதற்பொருள் வேறு எவரும் அல்லர். அப்படியாக, நீ உண்டாக்குவது யாரை? நீ காப்பது எவரை? நீ அழிப்பதுதான் யாரை? எங்களால் அறிய முடியவில்லையே!

அரும்சொற்பொருள்:— பெயர்த்து: வேறுபடுத்து. தாரை: ஒழுங்கு. படைத்தல்: தோற்றுவித்தல். அளித்தல்: காத்தல். துடைத்தல்: அழித்தல்.

நரசிங்கத்தைப் பிரமன் வழிபடல்

நின்னுளே என்னை
    நிருமித்தாய்; நின் அருளால்
என்னுளே, எப்பொருளும்
    யாவரையும் யான் ஈன்றேன்;
பின் இலேன்; முன் இலேன்;
    எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியதுஓர்
    பொற்கலனே போல்கின்றேன்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— எம் தந்தையாகிய எம்பெருமானே! உன்னிடத்தினின்றும் என்னைப் பிறப்பித்தாய். உன்னுடைய கருணையைக் கொண்டு என்னிடத்தினின்றும் எல்லாப் பொருள்களையும், எல்லா உயிர்களையும் யான் படைத்தேன். எனக்கு, பின்னும் தெரியாது, முன்னும் தெரியாது. தங்கத்தினின்றும் உண்டாக்கப்பெற்ற ஓர் தங்க ஆபரணத்தைப் போன்றவன் நான்.

அரும்சொற்பொருள் ;— நிருமித்தல்: உண்டாக்குதல். ஈன்றேன்: பெற்றேன்.

விளக்கம் :— பொன்னாகிய உன்னிலிருந்து எடுத்துச் செய்யப் பெற்ற ஓர் அணிகலன் நான். எனவே எனக்குத் தனித் தன்மை இல்லை என்பது பிரமன் கூற்று.

பிரகலாதன் வரம் வேண்டல்

"முன்பு பெறப்பெற்ற
பேருே முடிவுஇல்லை;
பின்பு பெறும்பேறும்
உண்டோ? பெறுகுவெனேல்
என்பு பெருத
இழிபிறவி எய்தினும்நின்
அன்பு பெறும்பேறு
அடியேற்கு அருள்''என்ருன்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து ;— முன்னே நான் அடைந்த நன்மைக்கு அளவே கிடையாது. இனி யான், அடையவேண்டிய பாக்கியம் வேறு இருக்கின்றதா? பெறவேண்டி யிருக்குமானுல், எலும்பு இல்லாத உடலோடு கூடிய தாழ்ந்த பிறப்பாகிய, புழுவாய்ப் பிறக்கினும், அப்போதும் உன் அன்பைப் பெறுகின்ற சிறப்பை அடியேனுகிய எனக்கு நீ அருளல் வேண்டும் என்று இசைத்தான் பிரகலாதன்.

அரும்சொற்பொருள் :— பெறுகுவனேல்: பெறுவேனுனுல். என்பு: எலும்பு.

விளக்கம் :— முன்பு என்பது சிறிது முன் தோன்றிய நரசிங்கத் தோற்றத்தைச் சுட்டும். என்பு இல்லாத உடற் பிறவி, புழு. 'என்பிலதனை வெயில் போலக்காயுமே' என்பது திருக்குறள். 'புழுவாய்ப் பிறக்கினும், புண்ணியா! உன் அடி என் மனத்தே வழுவாது இருக்க வரம் தரல் வேண்டும்' என்பது தேவாரம். அப்பர் பெருமான் வேண்டிய வரத்தையே பிரகலாதாழ்வாரும் வேண்டுகிருர்.

பாடல்-86

இராமனைக் கண்ட வீடணன் மெய்ப்பாடு

வீரனை நோக்கி, அங்கம்
மென்மயிர் சிலிர்ப்ப, கண்ணீர்
வாரநெஞ்சு உருகி, 'செங்கண்
அஞ்சன மலை! அன்று ஆகின்,
கார்முகில் கமலம் பூத்தது!
அன்று,இவன் கண்ணன் கொல்லாம்;
ஆர்அருள் சுரக்கும் நீதி
அறநிறம் கரிதோ?' என்றான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— வீரனாகிய இராமபிரானைப்பார்த்து உடம்பிலுள்ள மென்மைவாய்ந்த மயிர்களெல்லாம் குளிர்ச்சி அடைய, கண்களினின்றும் நீர்பெருக, உள்ளம் கசிந்து வீடணன் பேசுகின்றான்; 'இராமபிரான் சிவந்த கண்களையுடைய மை மலையோ? அது அன்றேல் செந்தாமரை மலர்கள் தன்னுள் பூக்கப்பெற்ற கரியமேகமோ? அல்லது இவன் தான் திருமாலோ? நிறைந்த கருணையைக் கொட்டுகின்ற நீதி வழங்கும் அறத்தின் வடிவம் கரிய நிறமாக இருக்குமோ?'

அரும்சொற்பொருள் :— அங்கம் : உடம்பு. மென்மயிர் : மெல்லியமயிர். சிலிர்த்தல் : புளகாங்கிதம் எய்துதல். வார : கொட்ட. அஞ்சனம் : மை. ஆர் : நிறைந்த.

விளக்கம்:— வீடணனை அரக்கத்தன்மையினின்றும் விலக்கிக் காட்ட, 'மென்மயிர்' என்றார். இராமபிரானின் கரிய திருமேனியில் ஈடுபட்ட வீடணாழ்வார் 'அறநிறம்கரிதோ' என்று வியக்கின்றார்.

வீடணன் தெளிவு

பெரும்தவம் இயற்றி ஞேற்கும்
　　பேர்வுஅரும் பிறவி நோய்க்கு
மருந்துஎன நின்ருன் தானே,
　　வடிக்கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தனன்; நின்றது என்னே
　　இயம்புவது? எல்லை தீர்ந்த
அருந்தவம் உடையர் அம்மா,
　　அரக்கர்?''என்று அகத்துள் கொண்டான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— பெரிய தவத்தைச் செய்தவர்க்கும் நீக்கமுடியாத பிறவி என்ற பிணிக்குத் தீர்க்கும் மருந்தாக அமைந்தவனுகிய இராமபிரானே, கூறிய அம்புகளை ஏவிக் கொல்லும் பொருட்டு வந்திருக்கின்ருன். இனி எஞ்சி நிற்பதை என்னவென்று சொல்லுவது? கணக்கற்ற அருமையான தவம் பெற்றவராவார் அரக்கர்கள் என்று உள்ளத்தே நினைந்தான் வீடணன்.

அரும்சொற்பொருள்:— பேர்தல்: நீங்குதல். வடி: கூர்மை. கொல்வான் : கொல்லும்பொருட்டு.

விளக்கம்:— பெரும்தவம் செய்வாரைவிட அருந்தவமுடையார் அரக்கர், இறைவனே கொல்லும் பேறு பெற்றமையால்.

பாடல்-88

வருணன் வழிபாடு

சண்டவான் கிரண வாளால்
தயங்குஇருட் காடு சாய்க்கும்
மண்டலத்து உறையும் சோதி
வள்ளலே! மறையின் வாழ்வே!
பண்டை நான் முகனே ஆதி
சராசரத்து உள்ளப் பள்ளப்
புண்டரீ கத்து வைகும்
புராதனு! போற்றி! போற்றி!

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— வெம்மைநிறைந்த நீண்ட கிரணங்கள் என்னும் வாட்படையால் திகைப்பைத் தருகின்ற இருள் கூட்டத்தை வெட்டி வீழ்த்துகின்ற சூரிய மண்டலத்திலே தங்கியிருக்கின்ற பரஞ்சோதி வள்ளலே! வேதத்தின் வாழ்வே! பழைய நான்கு முகம் படைத்த பிரமன் முதலான சராசரப் பொருள்களுடன் கூடிய ஆழமான உந்திக்கமலத்துடன் தங்கியிருக்கின்ற பழமையானவேனே! வணக்கம்; வணக்கம்.

அரும்சொற்பொருள் :— சண்டம்: வெம்மை. தயக்கம்: திகைப்பு. சரம்: இயங்கல். அசரம்: இயங்காமை.

விளக்கம்:— இதுமுதல் மூன்றுபாடல் வருணனை வழிவேண்டு படலத்தில் இராமனை வருணன் வழிபடல்.

பாடல்—89

வருணன் வழிபாடு

"கள்ளமாய் உலகம் கொள்ளும்
கருணையாய்! மறையில் கூறும்
எள்ளல்ஆ காத மூலத்து
யாதுக்கும் முதலாய் உள்ள
வள்ளலே! காத்தி" என்ற
மாகரி வருத்தம் தீர,
புள்ளின்மேல் வந்து தோன்றும்
புராதனு! போற்றி, போற்றி!

கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— 'கள்ளத்தனமாக உலக முழுதையும் மறைத்து வைத்திருக்கின்ற கருணை வடிவமே! மறைகள் கூறுகின்ற இகழமுடியாத முதற்பொருள் எதற்கும், முதற் பொருளாக உள்ள வள்ளலே! என்னைக் காப்பாற்று வாயாக!' என அழைத்த, பெரிய யானையின் துயரம் நீங்க, கருடன்மேல் வந்து அருளிய பழமையானவனே! வணக்கம்; வணக்கம்.

அரும்சொற்பொருள் :— கள்ளம்: ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து இறைமைத் தொழிலில் மறைத்தலைக் குறிக்கும். எள்ளல்: இகழ்தல். காத்தி: காப்பாற்றுவாயாக. மாகரி: கஜேந்திரன் என்ற பேரானை. புள்: கருடன்.

வருணன் வழிபாடு

அன்னை நீ; அத்தன் நீயே;
அல்லவை எல்லாம் நீயே;
பின்னும் நீ; முன்னும் நீயே;
பேறும் நீ; இகழ்வும் நீயே;
என்னை "நீ இகழ்ந்தது" என்றது
எங்ஙனே? ஈசன் ஆய
உன்னை நீ உணராய்; நாயேன்
எங்ஙனம் உணர்வேன், உன்னை?"

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— தாயும் நீ; தகப்பனும் நீ; பிறஎல்லாமும் நீயே; முடிவும் நீ! முதலும் நீயே; வீடும் நீ; அளறும் நீயே; நான், 'உன்னைப் பழித்துவிட்டேன்' என்றுசொல்லுவது எப்படி? இறைவனாகிய உன்னை நீயே உணரவில்லை; அப்படியிருக்க, நாய்போன்ற கடையேனாகிய நான் உன்னை எப்படி அறிவேன்?

அரும்சொற்பொருள் :— அத்தன்: தந்தை. பேறு: மோட்சம். இகழ்வு: நரகம்.

விளக்கம் :— இகழ்ந்தது என்ற செய்கை, இறைவன் என உணர்ந்து வருணன் வழிவிடாமையைக் குறிக்கின்றது.

இராமன் பெருமை பற்றி அங்கதன்

பூதநா யகன்நீர் சூழ்ந்த
　　புவிக்குநா யகன்;இப் பூமேல்
சீதைநா யகன்;வேறு உள்ள
　　தெய்வநா யகன்;நீ செப்பும்
வேதநா யகன்;மேல் நின்ற
　　விதிக்குநா யகன்;தான் விட்ட
தூதன்யான், பணித்த மாற்றம்
　　சொல்லிய வந்தேன் என்ருன்.

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— 'ஐம்பெரும் பூதங்களுக்கும் தலைவன்; கடல் சூழ்ந்த உலகத்துக்குத் தலைவன்; இந்த நிலத்தில் தோன்றிய சீதாதேவிக்குத் தலைவன்; வேறுபட்ட பல தெய்வங்களுக்கும் தலைவன்; நீ ஓதுகின்ற மறைகளுக்குத் தலைவன்; எல்லாப்பொருள்களின் மேலும் ஓங்கி நிற்கின்ற விதி என்ற ஒன்றையும் மாற்றக்கூடிய தலைவன், அந்த இராமபிரான் அனுப்பிய தூதுவன் நான்; அவன் சொன்ன செய்தியை உன்னிடம் சொல்ல வந்திருக்கின்றேன்' என்ருன் அங்கதன் இராவணனிடம்.

அரும்சொற்பொருள்:— பூ: உலகம். பணித்த: சொல்லிய மாற்றம்: சொல். சொல்லிய: சொல்லும் பொருட்டு.

விளக்கம் :— சிதை நிலத்தில் பிறந்தாள் ஆதலின் பூமேல் சீதை என்ருள். இராவணனை 'ஐயன் வேதம் வல்லான், அறிவாளன்' என்று பிறிதோரிடத்துப் பேசப்படுதலால், 'நீ செப்பும் வேதநாயகன்' என்ருர்.

பாடல்–92

கும்பகன்னன் இராமனை வியத்தல்

கண்டனன் வதனம்,வாய்,
கண்,கை, கால்,எனப்
புண்டரீ கத்தடம்
பூத்து, பொன்சிலை
மண்டலம் தொடர்ந்து,மண்
வயங்க வந்ததுஓர்
கொண்டலின் பொலிதரு
கோலத் தான்தனை.

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— முகம், வாய், கண், கை, கால், என்ற தாமரைப் பூக்கள் பூத்துப் பொலிகின்ற பொய்கையானது, கையிலே வனப்புமிக்க வில்வட்டம் தொடர, மண் விளங்க, மேகத்தைப்போல் பொலிந்து காட்சிதருகிற இராமபிரானைக் கண்டான் கும்பகன்னன்.

அருஞ்சொற்பொருள் :— வதனம்: முகம். புண்டரீகம்: தாமரை. தடம்: நீர்நிலை. பொன்: அழகு. வயங்க:விளங்க. கொண்டல்: மேகம்.

விளக்கம்:— வாய், கண், கை, கால், தாமரை என்பதை,

"எய்வண்ண வெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தார்என் முன்னே நின்றார்;
கைவண்ணம் தாமரை,வாய் கமலம் போலும்;
கண்இணையும் அரவிந்தம், அடியும் அஃதே..."

என்பர் திருமங்கையாழ்வார். "கண்ணும், திருவடியும், கையும், திருவாயும் செய்ய, கரியவனை' என்பர் இளங்கோ வடிகள்.

கருடன் வழிபாடு

தேவாதி தேவர் பலராலும் முந்து
திருநாமம் ஓது செயலோய்!
மூவாதுஎந் நாளும் உலகுஏழொடு ஏழும்
அரசாளும் மேன்மை முதல்வா!
மேவாத இன்பம் அவைமேவி, மேவ
நெடுவீடு காட்டுஅம் முடியாய்!
ஆ,ஆ! வருந்தி அழிவாய்கொல்! ஆர்இவ்
அதிரேக மாயை அறிவார்?

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— அமரர்கள் பலராலும், அவர்களின் தலைமை அமரர்களாலும், உயர்ந்த திருப்பெயரைச் சொல்லி ஏற்றக் கூடியவனே! எந்தக்காலத்தும் முதுமை எய்தாது ஈரேழு பதினான்கு உலகங்களையும் அரசு செலுத்துகின்ற சிறப்பு மிக்க முதல்வனே! அடைதற்கு அரிய இன்பங்கள் எல்லா வற்றையும் அடைந்து, பின் உன்னை அடையும்படி நீண்ட வீட்டு இன்பத்தைத் தரவல்ல அந்த முடியாக இருப்பவனே! அடாடா! இவ்வளவு சிறந்த நீயே துன்புற்று அழிவாய் போலும்! இந்தப் பெரிய மாயத்தை யாரே அறிவார்?

அரும்சொற்பொருள் :— முந்து திருநாமம் : ஆதிப்பெயர். மேவி : பொருந்தி. ஆ,ஆ,! : வியப்பிடைச் சொல். அதிரேகம் : மிக்க.

விளக்கம்:— இதுவும் அடுத்தபாடலும் நாகபாச படலத்தில், கருடன் இராமபிரானை ஏத்துதல்.

பாடல்-94

கருடன் வழிபாடு

பேர்ஆயி ரங்கள் உடையாய்; பிறந்த
பொருள்தோறும் நிற்றி பிரியாய்;
தீராய்; பிரிந்து திரிவாய்; திறம்தொறு
அவைதேறும் என்று தெளியாய்;
கூர்ஆழி அம்கை உடையாய்; திரண்டுஓர்
உருஆதி; கோடல் உரிபோல்,
ஆராயின், ஏதும் இலேயாதி; ஆர்,இவ்
அதிரேக மாயை அறிவார்?

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— ஆயிரம் திருப்பெயர்களை உடையவனே! தோன்றிய எல்லாப் பொருள்களிடத்தும் பிரியாது நிற்கின்றாய்; அழிவு இல்லாய்; பலவகைத் தோற்றம் எடுத்து, உன் மெய் வடிவத்தினின்றும் பிரிந்து திரிகின்றாய்; அவ்அவ் வகைகளில் அவை உன்னை இனம் கண்டு கொள்ளும் என்று தெளியாதவனாக இருக்கின்றாய்; கூர்மையான சக்கரப்படையை வனப்பு மிக்க கையிலே தாங்கி நிற்கின்றாய்; எல்லாம் ஒரு சேர்ந்த ஒப்பற்ற பேருருவம் எடுத்து விளங்குகின்றாய். ஆராய்ந்து பார்க்குமிடத்து வெண்காந்தள் கிழங்கை உரித்துப் பார்த்தால் உள்ளே ஒன்றும் இல்லாதது போல ஒன்றும் விளங்காத புதிராக இருக்கின்றாய். இந்தப் பெரிய மாயத்தை யாரே அறிவார்?

அரும்சொற்பொருள் :— கூர்: கூர்மையான. கோடல்: உரித்தால் ஒன்றும் இல்லாது போகின்ற வெங்காயம் போன்ற ஒரு பொருள். உரி: தோல்.

பாடல்-95

அமரர் வழிபாடு

உன்னை உள்ள படிஅறியோம்
உலகை உள்ள திறம்உள்ளோம்;
பின்னை அறியோம், முன்அறியோம்;
இடையும் அறியோம் பிறழாமல்;
நின்னை வணங்கி நீவகுத்த
நெறியில் நிற்கும் இதுஅல்லால்,
என்னை, அடியோம் செயற்பால?
இன்பதுன்பம் இல்லோனே.

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— இன்பம், துன்பம் என்ற இரண்டையும் கடந்தவனே! உன்னை உள்ளவாறு அறியும் ஆற்றல் உடையேம் அல்லேம். உலகத்தையும் உள்ளபடி ஆராய்ந்து அறிய மாட்டோம். பின்னே நடக்கப் போவது என்ன என்பதையும் அறிய மாட்டோம். முன்னே நடந்தது என்ன என்பதும் எங்களுக்குத் தெரியாது. நடுவில் நடப்பதையும் மாறுபாடில்லாமல் தெரிந்து கொள்ளமாட்டோம். உன்னைக் கும்பிட்டு நீ விதித்த வழியிலே நிற்கின்ற ஒன்றைத் தவிர, நாங்கள் செய்யத்தக்கன என்ன இருக்கின்றன?

அரும்சொற்பொருள் :— உள்ளுதல் : எண்ணுதல். பிறழுதல் : மாறுபடுதல். நெறி : வழி நிற்கும் அதுவல்லால் : நிற்கின்ற அது தவிர.

விளக்கம்:— 'அவனன்றி ஓர்அணுவும் அசையாது'; 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்றனர் பெரியார். இதினின்றும் ஆறு பாடல்கள் 'பிரமாத்திரப் படலத்தில்' தேவர்கள் இராமனை வணங்கல்.

அமரர் வழிபாடு

'அரக்கர் குலத்தை வேர்அறுத்துஎம்
அல்லல் நீக்கி அருள்வாய்'என்று
இரக்க, எம்மேல் கருணையினல்
ஏயா உருவம் இவைஎய்தி,
புரக்கும் மன்னர் குடிப்பிறந்து,
போந்தாய், அறத்தைப் பொறைதீர்ப்பான்,
கரக்க நின்றே நெடுமாயம்
எமக்கும் காட்டக் கடவாயோ?

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— "அரக்கர்களுடைய கூட்டத்தை வேருடன் களைந்து, எங்கள் துன்பத்தைப் போக்கி அருள்வாய்" என்று நாங்கள் முறையிட, எங்கள் மீது கொண்ட கருணையின் காரணமாக, முழுமுதலாகிய நீ, மானுடனுகப் பிறப்பது குறை என்று எண்ணுமல், முழுமுதலுக்குப் பொருந்தாத வடிவத்தைப் பெற்று, உலகத்தைக் காக்கின்ற அரசர் குலத்திலே தோன்றிவந்தாய்; அறத்தின் பாரத்தை நீக்கும்பொருட்டு மறைந்து நின்றே பெரிய மாயத்தை எங்களுக்கும் அறிவிக்கவல்லாயோ?

அரும்சொற்பொருள் :— ஏயா: பொருந்தாத, புரத்தல்: காத்தல். பொறை: சுமை. கரக்கநின்று. ஒளிந்துநின்று.

பாடல்-97

அமரர் வழிபாடு

ஈன்ருய், இடுக்கண் துடைத்துஅளிப்பான்
இரங்கி, அரசர் இல்பிறந்தாய் ;
மூன்றுஆம் உலகம் துயர்தீர்த்தி
என்னும், ஆசை முயல்கின்ருேம்;
ஏன்றும் மறந்தோம், அவன்அல்லன்
மனிதன் என்றே; இதுமாயம்
போன்றது இல்லே; ஆளுடையாய்!
பொய்யும் புகலப் புக்காயோ?

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து— எங்களே முன்னே பெற்ருய். பெற்ற மக்களான எங்கள் துன்பத்தை நீக்கி எங்களேக் காக்கும் பொருட்டு, இரக்கம்கொண்டு அரசர் குடியிலே தோன்றிஞய். மூன்று ஆகிய உலகத்துத் துன்பங்களேயெல்லாம் தீர்ப்பாய் என்று ஆசைகொண்டு, நாங்கள் முயற்சி செய்கின்ருேம். முயன்றும் மறந்துவிட்டோம். நீ தேவன் அல்லன் மனிதன் என்றே, சிலபோது எண்ணிவிட்டோம். இந்த மாயம் போன்ற செய்கை வேறு இல்லே. எங்களே ஆட் கொண்டவனே ! நீ பொய்யும் சொல்லப் புறப்பட்டு விட்டாயோ ?

அரும்சொற்பொருள் :— ஏன்று : முயன்று.

விளக்கம்:— தேவத்தன்மையை மறந்து இராமன் மனித ஞகவே நடிப்பதால் பொய்யும் புகலப் புக்காயோ என்று கூறுவாராயினர்.

பாடல்-98

அமரர் வழிபாடு

அண்டம் பலவும் அனைத்துஉயிரும்
அகத்தும் புறத்தும் உளஆக்கி,
உண்டும், உமிழ்ந்தும் அளந்துஇடந்தும்,
உள்ளும் புறத்தும் உளை ஆகிக்
கொண்டு, சிலம்பி தன்வாயின்
கூர்நூல் இயையக் கூடுஇயற்றி,
பண்டும் இன்றும் அமைக்கின்ற
படியை ஒருவாய் பரமேட்டி!

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— பரம்பொருளே! பல அண்டங்களையும் எல்லா உயிர்களையும் உண்டும், உமிழ்ந்தும், உள்ளுக்குள்ளேயும், வெளியேயும் உளவாகச்செய்யும், உலகத்தை அளந்தும், பிளந்தும் உள்ளேயும் வெளியேயும் இருந்து கொண்டு, சிலம்பிப் பூச்சி, தன் வாயினால் மென்மையான நூலைப் பொருந்துமாறு நூற்று, கூட்டைக் கட்டி முன்னும் இன்றும் செய்கின்ற நிலையை, நீங்காது உறைவாய்.

அருஞ்சொற்பொருள் :— உமிழ்தல்: கக்குதல். இடத்தல்: தோண்டுதல். இயைய: பொருத்த. இயற்றி: செய்து. படி: நிலை. ஒருவுதல்: நீங்குதல்.

பாடல்-99

அமரர் வழிபாடு

துன்ப விளையாட்டு இதுவேயும்,
நின்னைத் துன்பம் தொடர்புஇன்மை
இன்ப விளையாட்டு ஆம்எனினும்,
அறியா தேமுக்கு இடர்உறுமால்;
அன்பின் விளைவும் அருள்விளைவும்
அறிவின் விளைவும் அவைஎல்லாம்
முன்பு, பின்பு, நடுஇல்லாய்!
முடித்தால் அன்றி முடியாவே.

-கம்பர்-
(யுத்த காண்டம்)

கருத்து :— முதல், இடை, இறுதி இல்லாதவனே! துன்ப விளையாட்டாகிய இச்செயலும், துன்பம் உன்னைத் தொடராமையினால் உனக்கு இன்ப விளையாட்டாகவே இருக்கின்றது என்றாலும், அறியாத எங்களுக்கு இது துயரமாக இருக்கின்றது. அன்பின் தோற்றமும், கருணையின் நெகிழ்ச்சியும், அறிவின் செயலும், அவை அனைத்தும் நீ முடிவு செய்தால் அன்றி முடிவு பெறமாட்டா.

விளக்கம் :— இன்ப துன்பம் எல்லாவற்றையும் இறைவன் விளையாட்டாக ஒரே படித்தாக ஏற்கின்றான். இன்பத்தையும் துன்பத்தையும் பாகுபடுத்திப் பார்க்கின்ற மற்றையோர் இடர்ப்படுகின்றனர். இடர்களைப் போக்க வல்லவன் இறைவனே; முடிக்க வல்லவன் அவனே என்பது கருத்து.

அமரர் வழிபாடு

வருவாய் போல வாராதாய்;
 வந்தாய் என்று மனம்களிப்ப,
வெருவாது இருந்தோம்; நீஇடையே
 துன்பம் விளைக்க மெலிகின்றோம்;
கருஆய் அளிக்கும் களைகண்ணே!
 நீயே இதனைக் களையாயேல்,
திருவாழ் மார்ப! நின்மாயை
 எம்மால் தீர்க்கத் தீருமோ?

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து : திருமகள் தங்கியிருக்கின்ற மார்பையுடையவனே! அறிவுக்குப் புலப்படுபவன் போல் நின்று தெளிவு பெற வாராதிருக்கின்றாய். அரக்கரை அழித்து எங்களைக் காக்க நீ வந்தாய் என்று உள்ளக் களிப்போடு நாங்கள் அச்சம் தீர்ந்திருந்தோம். நீ நடுவிலே வந்து எங்களுக்குத் துயரத்தை உண்டாக்க, நாங்கள் நலிவு அடைகின்றோம். கருவில் தோன்றி எங்களைக் காக்க நிற்கும் புகலிடமே! நீயே இத் துன்பத்தை நீக்காயானால் உன் மாயையை நாங்கள் தீர்க்க, அது தீர்ந்துவிடுமா?

அரும்சொற்பொருள் :— வெருவுதல் : அஞ்சுதல். கருவாய் : கருப்பத்தில் தோன்றி. களைகண் : பற்றுக்கோடு. களைதல் : நீக்குதல்.

சிவபெருமான் இராமனைப் பாராட்டல்

நாராயண, நரர்என்றுஇவர்
உளராய்,நமக்கு எல்லாம்
வேராய்,முழு முதல்காரணப்
பொருளாய்,வினை கடிந்தார்
ஆராயினும் தெரியாததுஓர்
நெடுமாயையின் அகத்தார்,
பாராயண மறைநான்கையும்
கடந்தார்இவர், பழையோர்.

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— இந்த இராம இலக்குவர், நாராயணன், நரன் என்று சொல்லத்தக்க இருவராய் இருந்து நம் அனைவர்க்கும் மூலகாரணமாகவும், முழுமுதலாகவும், வினையின் நீங்கியவர்கள் ஆய்ந்து பார்த்தாலும் தெளிய முடியாத நீண்ட மாயையின் உள்ளே மறைந்திருப்பவராயும் உள்ள தக்கோர் பாராயணம் செய்கின்ற நான்மறைகட்கும் அப்பாற்பட்டவராகிய பழையவர் ஆவார்.

அரும்சொற்பொருள் :— வேர் : முதல். கடிதல் : நீக்குதல். அகம் : உள்.

விளக்கம் :— திருமால் மூன்று இரட்டைப் பிறவி பிறந்தனர் என்பர். நர நாராயணர், இராம இலக்குவர், கிருட்டின அருச்சுனர் என்பவை அவை.

"நல்நிலா எறிக்கும் பூணுய்! நரனும் நாரணனும் ஆனேம்"
"பின்னொரு பிறப்பில் யாமே இராம இலக்குவ பேர் பெற்றேம்"
"இன்நெடும் பிறப்பில் நீயும் யானுமாய் ஈண்டு நின்றேம்"

எனக் கண்ணன் பார்த்தனுக்கு அருளியதாக வில்லிபுத்தூர் ஆழ்வார் கூறுவார். இது முதல் மூன்று பாடல்கள் நிகும்பலையாகப் படலத்தில் சிவபெருமான் வானரர்க்குக் கூறியது.

பாடல்-102

சிவபெருமான் இராமனைப் பாராட்டல்

"அறத்தாறுஅழிவு உளதாம்"என,
அறிவும்தொடர்ந்து, அணுகாப்
புறத்தார்புகுந்து, அகத்தார்எனப்
புகுந்துஅன்னது புரப்பார்,
மறத்தார்குலம் முதல்வேர்அற
மாய்ப்பான்இவண் வந்தார்;
திறத்தால்அது தெரிந்துயாவரும்
தெரியாவகை திரிவார்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— அறிவு தொடர்ந்து நெருங்க முடியாத, அறிவிற்கு அப்பாற்பட்டவரும், அறத்தின் வழிக்குக் கேடுவரும் தறுவாயில் நுழைந்து, அவ் அறத்தைக் காக்கின்ற உலகத்தவர் போலவே. தாங்களும் புகுந்து, அவ் அறத்தைக் காப்பாற்றுவாராகி, மறத்தொழில் பூண்ட அரக்கர் குலத்தை ஆணிவேரோடு களையும் பொருட்டு, ஈண்டுத் தோன்றினர்; எனினும் அவர் ஆற்றலால் அவ்வுண்மையைக் கண்டு, பிற எவரும் கண்டு கொள்ளாவகையில், அவர் உலாவுவார்.

அரும்சொற்பொருள் :— ஆறு: வழி. அணுகுதல், அடைதல். புரத்தல்: காப்பாற்றுதல். மறம் : பாபம். முதல்வேர் : சல்லி வேர். இவண் : இவ்விடத்து. திறம் : வலிமை.

பாடல்-103

சிவபெருமான் இராமனைப் பாராட்டல்

உயிர்தோறும்உற்று உளன்தோத்திரத்து
ஒருவன்என உரைக்கும்
அயிராநிலை உடையான்இவன்;
அவன்,இவ் உலகுஅனைத்தும்
தயிர்தோய்பிரை எனல்ஆம்வகை
கலந்துஏறிய தலைவன்;
பயிராததுஓர் பொருள்இன்னதுஎன்று
உணர்வீர்;இது பரமால்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— உயிர்களுள் எல்லாம் கலந்துள்ள தோத்திரம் செய்யத்தக்க ஒப்பற்றவன் என்று பாராட்டுதற்குரிய, ஐயத்துக்கு இடமில்லாதவன் இந்த இலக்குவன்; அந்த இராமன் இந்தப்புவி முழுதும் தயிர் தோய்தற்குக் காரண மான பிரைமோர் என்று சொல்லலாம்படி யாண்டும் கலந்திருக்கின்ற தலைவன் ஆவான்; தவறில்லாத ஒப்பற்ற பொருள் இது என்று அறியுங்கள். இதுவே பரம் பொருளாம்.

அரும்சொற்பொருள் :— அயிர்த்தல் ; ஐயுறுதல். இவன், இலக்குவனையும், அவன், இராமனையும் சுட்டுகின்றன.

இமையோர் இராமனை ஏத்துதல்

கண்ணனே! எளியேம் இட்ட
    கவசமே! கடலே அன்ன
வண்ணனே! அறத்தின் வாழ்வே!
    மறையவர் வலியே! மாருது
ஒண்ணுமே நீஅ லாதுஓர்
    ஒருவர்க்கு,இப் படைமேல் ஊன்ற;
எண்ணமே முடித்தி, என்று
    ஏத்தினர் இமையோர் எல்லாம்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— அமரர்கள் எல்லாம், "கண்ணபிரானே! நாங்கள் பாதுகாப்பாக அணிந்து கொண்ட மேலங்கியே! கடல் போன்ற வண்ணமுடையவனே! அறத்தின் வாழ்க்கையே! மறை உணர்ந்தோரின் ஆற்றலே! உன்னைத்தவிர, புறம் காட்டாமல் இந்த அரக்கப்படை மீது ஊன்றி நிற்க வேறு எவராலும் ஆகுமா? எங்கள் விருப்பத்தை ஈடேற்று வாயாக!" என்று இராமனை வழிபட்டார்கள்.

அரும்சொற்பொருள்:— வண்ணம் : நிறம். ஒண்ணும்: முடியும். ஊன்ற : நிலைத்து நிற்க.

விளக்கம் :— மூலபலவதைப்படலத்தில் இராமனை வானவர் வணங்குதல்.

பாடல்–105

இராமனின் ஏற்றம்

தாய்,“படைத்து உடைய செல்வம்
ஈக,”எனத் தம்பிக்கு ஈந்து,
வேய்படைத்து உடைய கானம்
விண்ணவர் தவத்தின் மேவி,
தோய்படைத் தொழிலால் யார்க்கும்
துயர்துடைத் தானை நோக்கி,
வாய்படைத்து உடையார் எல்லாம்
வாழ்த்தினர், வணக்கம் செய்தார்.

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— தாயாகிய கைகேயி, “நீ பெற்ற அரசுச் செல்வத்தைக் கொடுத்துவிடு” என்று சொல்ல, தம்பியாகிய பரதனுக்குத் தந்துவிட்டு, மூங்கில் அடர்ந்த காடு நோக்கி, தேவர்கள் செய்த தவத்தின் பயனைச் சென்று, பொருந்திய படைக்கலத் தொழிலால் எல்லோருடைய இடுக்கண்களையும் நீக்கி அருளிய இராமபிரானைப்பார்த்து, வாய்பெற்றவர்களெல்லாம் வணங்கி வாழ்த்தினர்கள்.

அரும்சொற்பொருள் :— தாய் : (ஈண்டு) கைகேயி. தம்பி : பரதன். வேய் : மூங்கில். கானம் : காடு, தோய் : அழிக்கப் பொருந்திய. படைத்தொழில் : போர்ச்செயல்.

விளக்கம் :— இராமனை வாழ்த்தாதார் வாய் பெற்ற பயன் பெறுதார் என்பது கருத்து. இதினின்றும் மூன்று பாடல் மூலபலவதைப்படலத்தில் இராமபிரானின் ஏற்றம் கூறுவன.

இராமனின் ஏற்றம்

தீமொய்த்த அனைய செங்கண்
அரக்கரை முழுதும் சிந்தி,
பூமொய்த்த கரத்தர் ஆகி,
விண்ணவர் போற்ற, நின்றான்,
பேய்மொய்த்து நரிகள் ஈண்டிப்
பெரும்பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியன் நின்ற
கறைமிடற்று இறைவன் ஒத்தான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— நெருப்பு நிறைந்ததை ஒத்த சிவந்த கண்களை யுடைய அரக்கர்களை முழுதும் அழித்துவிட்டு, பூக்கள் மலிந்த கைகளை உடையவர்களாகி, அமரர்கள் வணங்க நின்ற இராமபிரான், பேய்கள் மொய்க்க, நரிகள் நெருங்க, மிக்க பிணங்கள் விளங்கித் தோன்றும் சுடுகாட்டினுள் தன்னந் தனியனாய் நின்ற நஞ்சுதங்கிய கழுத்தையுடைய சிவபிரானை நிகர்த்தான்.

அரும்சொற்பொருள்:— சிந்தி: அழித்து. மொய்த்த: மலிந்த. கரம்: கை. ஈண்டி: நெருங்கி. பிறங்கி: விளங்கி. ஈமம்: சுடுகாடு. கறை: நஞ்சு. மிடறு: கழுத்து.

விளக்கம்:— அரக்கரை முழுதும் அழித்து, தன்னந்தனியனாய் நின்ற இராமபிரான் சுடுகாட்டில் 'நட்டம் பயின்றாடும் நாதன்' ஆகிய சிவபெருமானை ஒத்தான் என்க.

பாடல்–107

இராமனின் ஏற்றம்

அண்டமாக் களமும், வீந்த
அரக்கரே உயிரும் ஆக,
கொண்டதோர் உருவம் தன்னுல்
இறுதிநாள் வந்து கூட,
மண்டுநாள், மறித்தும் காட்ட,
மன்னுயிர் அனைத்தும் வாரி
உண்டவன் தானே ஆன
தன்ஒரு மூர்த்தி ஒத்தான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— பெரிய போர்க்களம் அண்டமாகவும், அழிந்து ஒழிந்த அரக்கர்கள் அவ்வண்டத்திலுள்ள உயிர்களாகவும், தான் கொண்ட ஒப்பற்ற வடிவத்தினுல் உலகம் அழியும் ஊழிக் காலம் வந்து பொருந்த, நிறைந்த நாள் திரும்ப உண்டாக்குதற்கு நிலைபெற்ற உயிர்களையெல்லாம் வாரி உண்டவனுகிய ஒப்பற்ற மூர்த்தியாகிய தன்னையே தான் நிகர்த்தான்.

அரும்சொற்பொருள் :— மாக்களம்: பெரிய போர்க்களம், வீந்த : அழிந்த. இறுதி : முடிவு.

பாடல்—108

வீடணன் மொழியை மாலியவான் போற்றல்

அளப்பஅரும் உலகம் யாவும்
அளித்துக்காத்து அழிக்கின் ருன்,தன்
உளப்பெருந் தகைமை தன்னுல்
ஒருவன்என்று உண்மை வேதம்
கிளப்பது கேட்டும் அன்றே;
அரவின்மேல் கிடந்து மேல்நாள்
முளைத்தபேர் இராமன், என்ற
வீடணன் மொழி பொய்த்துஆமோ?

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— தன்னுடைய உள்ளத்தின் பெரிய தகுதியைக் கொண்டு, அளக்க முடியாத உலகம் எல்லாவற்றையும் தோற்றுவித்து, காப்பாற்றி முடிக்கின்றவனுகிய ஒருவன் இருக்கின்ருன் என்று மெய்யாக மறைகள் மொழிவதை நாம் கேட்டிருக்கின்ருேமல்லவா? அப்பரம்பொருளே பாற்கடலில் முன்னுள் பாம்புப் படுக்கையில் கிடந்து, இன்று இராமன் என்று பெயர் பெற்றுத் தோன்றிய ஒன்று, என்று கூறிய வீடணன் மொழி பொய்யாகுமா?

அரும்சொற்பொருள்:— அளித்து: (இங்கு) படைத்தல் என்ற பொருளில் வந்திருக்கிறது. கிளத்தல்: சொல்லுதல். அரவு: ஆதிசேடன் என்னும் பாம்பு. மேல்நாள்: அந்த நாள்.

விளக்கம்:— இராவணன் களங்காண் படலத்தில் இராவணனிடம் மாலியவான் மொழிதல்.

பாடல்–109

பிரமன் இராமனைப் பாராட்டுதல்

மன்னர் தொல்குலத்து அவதரித்
தனை,ஒரு மனிதன்
என்ன உன்னலை உன்னை நீ;
இராம,கேள்! இதனை,
சொன்ன நான்மறை முடிவினில்
துணிந்தமெய்த் துணிவு
நின்அ லாதுஇல்லை; நின்னின்வேறு
உள துஇலை; நெடியோய்!

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— இராமபிரானே! நீண்டு உலகை அளந்தவனே! அரசர்களின் பழமையான சூரிய குலத்திலே பிறந்து அருளினாய். உன்னை ஒரு சாதாரண மனிதன் என்று நீ நினையற்க. இவ்வுண்மையைப் பேசிய நான்கு வேதங்களின் முடிவாகத் துணிந்து சொல்லப்பட்ட உண்மைத் துணிவு நின்னைத்தவிர வேறு இல்லை. உன்னை அன்றி வேறு உலகமும் இல்லை.

அரும்சொற்பொருள் :— உன்னலை : எண்ணாதே.

விளக்கம் :— இது முதல் எட்டுப்பாடல்கள், மீட்சிப்படலத்தில் பிரமன் இராமனைப் பாராட்டுதல்.

பாடல்–110

பிரமன் இராமனைப் பாராட்டுதல்

எனக்கும், எண்வகை ஒருவற்கும்,
இமையவர்க்கு இறைவன்
தனக்கும், பல்பெரு முனிவர்க்கும்,
உயிருடன் தழீஇய
அனைத்தினுக்கும்,நீ யேபரம்,
என்பதை அறிந்தார்,
வினைத்து வக்குடை வீட்டஅருந்
தளை நின்று மீள்வார்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து ;— பிரமனாகிய எனக்கும், அட்ட மூர்த்தி என்று சொல்லக்கூடிய எட்டுவகை வடிவத்தையுடைய, ஒப்பற்ற கடவுளாகிய சிவனுக்கும், அமரர்களுக்கு அரசனாகிய தேவேந்திரனுக்கும் பல பெரிய இருடிகட்கும், உயிர் பெற்று உலாவும் எல்லாப் பொருள்கட்கும், பரம் பொருள் நிதான் என்பதை உணர்ந்தவர்கள், வினைத்தொடர்பு உடைய விடுபடுதற்கு அருமையான, பிணிப்பினின்றும் மீட்சியை அடைவார்.

அரும்சொற்பொருள்:— எட்டுவகை: வான். எரி, அறல், கால், மண், இரவி, மதி, உயிர் என்பன. துவக்கு: தொடர்பு. வீட்டஅரும்: விடுவதற்கு அரிய. தளை: கட்டு.

பாடல்-111

பிரமன் இராமனைப் பாராட்டுதல்

என்னைத் தான்முதல் ஆகிய
உருவங்கள் எவையும்,
முன்னைத் தாய்தந்தை எனும்பெரு
மாயையில் மூழ்கி,
தன்னைத் தான்அறி யாமையின்
சலிப்ப;அச் சலம்தீர்ந்து
உன்னைத் தாதைஎன்று உணர்குவ,
முத்திவித்து ஒழிந்த.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— 'என்னை முதலாக உடைய உயிர்ப்பொருள்கள் பலவும், முன்னைப் பெற்றோர் என்று பிறப்பித்த உறவினராகிய பெரிய மாயையில் முக்குளித்து, தனது உண்மை நிலைமையைத் தாம் அறியாமல் துன்பப்படுகின்றன. அத்துன்பம் தீர்ந்து ஒழிந்து, உன்னையே தந்தைஎன்று உணரும் தன்மையே, வீட்டு உலகுக்கு விதையாகும்'.

அரும்சொற்பொருள் :— சலித்தல் : துன்பம் அடைதல். சலம் : துயரம். உணர்குவ : உணரும் தன்மை. முத்திவித்து : மோட்சத்துக்கு விதை.

பிரமன் இராமனைப் பாராட்டல்

அரணம் என்றுஉளது, உன்னைவந்து
அறிவுகா ணுமல்
காரணம்; அவ்அறி வைக்கடந்து
அகல்வுஅரிது ஆக,
மரணம் தோற்றம்என்று இவற்றிடை,
மயங்குப; அவர்க்குஉன்
சரணம் அல்லதுஓர் சரண்இல்லை,
அன்னவை தவிர்ப்பான்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— உன்னை வந்து அறிய முடியாமல் தடையாக இருக்கின்றன ஐம்பொறிகள். அந்தப் புலன் வழிச்செல்லும் அறிவை நீங்கி மீள்வது அருமையாதலால், இறப்பு, பிறப்பு இவற்றினிடையே மயக்கத்தை அடைகின்றன உயிர்கள். அந்த உயிர்கட்கு அந்த மயக்கம் தெளிவதற்கு உன்னுடைய திருவடியைத் தவிர வேறு பற்றுக்கோடு இல்லை.

அரும்சொற்பொருள் :— அரணம் : தடுப்பு. கரணம் : பொறிகள். மயங்குப : மயங்குகின்றன. முதல் சரண்ம் திருவடி. இரண்டாவது சரண் புகலிடம்.

விளக்கம் :— 'உன்தன் சரணமே சரணம் என்று இருந்தேன்' என்பர் திருமங்கையாழ்வார்.

பிரமன் இராமனைப் பாராட்டல்

தோற்றம் என்பதுஒன்று உனக்குஇல்லை;
    நின்கணே தோற்றும்
ஆற்றல் சால்முதல் பகுதி;மற்று
    அதனுள்ஆம், பண்பால்
காற்றை முன்னுடைப் பூதங்கள்
    அவைசென்று கடைக்கால்
வீற்று வீற்றுஉற்று வீவுறும்;
    நீஎன்றும் விளியாய்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— உனக்கு ஒரு பொருளில் பிறப்பது என்ற ஒன்று இல்லை. வன்மை வாய்ந்த மூலப்பகுதி உன்னினின்றும் தோன்றியது. ஏனைய எல்லாப் பொருள்களும் அம்மூலப் பொருள்களினின்றும் உண்டாகும் தன்மையால், காற்றை முதலாகக்கொண்டு இயங்கும் ஐந்து பூதங்களும் சென்று ஊழிக்காலத்தில் தனித்தனியாகப் பிரிந்து பிரிந்து அழியும். நீயோ என்றும் அழியாய்.

அரும்சொற்பொருள்:— நின் கண்ணே : உன்னிடத்து. ஆற்றல் சால் : வன்மைமிக்க. கடைக்கால் : ஊழிக்காலம். வீற்று வீற்று : பிரிந்து பிரிந்து. வீவுறுதல் : அழிதல். விளியாய் : அழியமாட்டாய்.

பிரமன் இராமனைப் பாராட்டல்

மின்னைக் காட்டுதல் போல்வந்து,
விளியும்இவ் உலகம்
தன்னைக் காட்டவும், தருமத்தை
நாட்டவும், தனியே
என்னைக் காட்டுதி; இறுதியும்
காட்டுதி; எனக்கும்
உன்னைக் காட்டலை; ஒளிக்கினும்
இலை,மறை உரையால்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— விரைவில் அழியும் தன்மையுடைய மின்னலை, மேகம் பிறப்பிப்பது போல் தோன்றி, அழிந்து படுகின்ற இந்த உலகங்களை உண்டாக்கும்படியும், அறத்தை நிலை நாட்டுமாறும், தனி ஒருவனாக நின்ற நீ, முதலில் என்னைப் படைத்தாய்; என்னை அழிக்கவும் செய்கின்றாய்; எனக்குக் கூட உன்னுடைய உண்மை நிலையைக் காட்டுகின்றாயில்லை! அப்படி நீ மறைத்தாலும், வேதங்களின் சொற்களால் முழுதும் மறைக்க முடியவில்லை!

அரும்சொற்பொருள்:— விளிதல் : இறத்தல். இறுதி : முடிவு.

பிரமன் இராமனைப் பாராட்டல்

என்உ ருக்கொடுஇவ் உலகினை
ஈனுதி; இடையே
உன்உ ருக்கொடு புகுந்துநின் று
ஓம்புதி; உமைகோன்
தன்உ ருக்கொடு துடைத்தி;மற்று
இது,தனி அருக்கன்
முன்உ ருக்கொடு பகல்செயும்
தரத்தது முதலோய்!

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— (பிரமன் இராமனைப்பார்த்து) (எல்லாவற்றிற்கும்) 'முதலானவனே! (பிரமனாகிய) என் வடிவத்தைப் பெற்று, இவ்வுலகத்தினை உண்டாக்குகின்றாய்; நடுவிலே (திருமாலாகிய) உன் வடிவத்தைப் பெற்று இங்கே வந்து நின்று காப்பாற்றுகின்றாய்; உமையவள் தலைவனான சிவபெருமான் வடிவத்தைக் கொண்டு அழிக்கின்றாய்; இச்செயலானது,ஒப்பற்ற சூரிய பகவான் தன் வடிவத்தைக் கொண்டு, எதிரில் நின்று பகலை உண்டாக்குகின்ற தன்மையை உடையதாகும்' (என்று கூறினான்).

அரும்சொற்பொருள்:— ஈனுதல் : பிறப்பித்தல்: ஓம்புதல் : காத்தல். துடைத்தல் : அழித்தல். அருக்கன் : சூரியன். தரத்தது : தன்மை கொண்டது. மற்று, அசை.

பிரமன் இராமனைப் பாராட்டல்

ஓங்கா ரப்பொருள் தேறுவோர்
    தாம்உனை உணர்வோர்;
ஓங்கா ரப்பொருள் என்றுஉணர்ந்து
    இருவினை உகுப்போர்;
"ஓங்கா ரப்பொருள் ஆம்","அன்று"என்று,
    ஊழிசென் றுலும்,
ஓங்கா ரப்பொரு ளேபொருள்
    என்கலா உரவோர்.

-கம்பர்.

(யுத்த காண்டம்)

கருத்து :— பிரணவத்தின் பொருளைத் தெளிகின்றவர்களே உன்னை உணர்பவராவர். ஓங்காரத்தின் பொருள் நீயே என்று உணர்ந்த அவர்கள் இருவினையையும் அழிப்பார்கள். ஓங்காரத்தின் பொருள் நீயா, அன்று என்று வாதிடுவோர் ஊழிநாள் கடந்தாலும், ஓங்காரப்பொருளே பரம்பொருள் என்று துணியும் வலிமையற்றவராவர்.

அரும்சொற்பொருள்:— ஓங்காரம் : (நான்கு இடத்தும்) பிரணவமே. உகுத்தல் : அழித்தல். உரவு : வலிமை; என்கலா உரவோர் : வலிமையற்றவர்.

சிவபெருமான் இராமனிடம் கூறுவது

என்னும் மாத்திரத்து, ஏறுஅமர்
கடவுளும் இசைத்தான்;
'உன்னை நீஒன்றும் உணர்ந்திலை
போலுமால் உரவோய்!
முன்னை ஆதிஆம் மூர்த்திநீ;
மூவகை உலகின்
அன்னை சீதைஆம் மாது,நின்
மார்பின்வந்து அமைந்தாள்.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து:— என்று சொன்ன அளவில், விடைஏறும் கடவுளாகிய சிவபெருமானும் சொல்லுவான்: 'வலிமை மிக்கவனே! உன் தன்மையை நீ சிறிதும் அறிந்திலை போலும்; முன்னைய முதலாகிய மூர்த்தி நீ ஆவாய்; மூன்று வகையான உலகங்கட்கும் தாயாகிய சீதையாம் தேவி, உன் மார்பிலே வந்து பொருந்தியவளாகிய திருமகளே ஆவாள்'.

அரும்சொற்பொருள்:— மாத்திரத்து : அளவில்.

விளக்கம்:— இதுவும் அடுத்த பாடலும், மீட்சிப் படலத்தில், இராமனைப் பார்த்துச் சிவன் கூறுவது.

பாடல்-118

சிவபெருமான் இராமனிடம் கூறுவது

‘துறக்கும் தன்மையள் அல்லளால்,
　　தொல்லைஎவ் உலகும்
பிறக்கும் பொன்வயிற்று அன்னை;இப்
　　பெய்வளை பிழைக்கின்,
இறக்கும் பல்உயிர்; இறைவ! நீ
　　இவள்திறத்து இகழ்ச்சி
மறக்கும் தன்மையது’ என்றனன்;
　　மழுவலான் வழுத்தி.

-கம்பர்.
(யுத்த காண்டம்)

கருத்து :— ‘ஒதுக்கும் தகுதியை உடையாள் இவள் அல்லள்; பழைய எல்லா உலகத்தையும் ஈன்று எடுத்த அழகிய வயிற்றை உடைய அன்னையாவாள். (இச்சீதை) இந்த வளையலை அணிந்த சீதையை நீ கைவிட்டால் உலகில் உள்ள பல உயிர்களும் இறந்துபடும்; தலைவனே! இவள் மீது நீ எண்ணும் இகழ்ச்சி மறக்கும் தகையது’ என்று மழுவலானாகிய சிவன் வழுத்திக் கூறினன்.

அரும்சொற்பொருள்:— துறத்தல்: நீக்குதல். பொன்: அழகு. பெய்வளை: வளையலை அணிந்தவள். பிழைத்தல்: கைவிடல். மழுவலான்: சிவன்.

இராமகாதை

அங்கண்நெடு மதிள்புடைசூழ் அயோத்தி என்னும்
அணிநகரத்து, உலகுஅனைத்தும் விளக்கும்சோதி
வெங்கதிரோன் குலத்துக்குஓர் விளக்காய்த் தோன்றி,
விண்முழுதும் உயக்கொண்ட வீரன் தன்னை,
செங்கண்நெடுங் கருமுகிலை, இராமன் தன்னை,
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்,
எங்கள்தனி முதல்வனை,எம் பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே!

-குலசேகரர்.

கருத்து:— பரந்த நீண்ட மதிளை நாற்புறமும் உடைய அயோத்தி என்று சொல்லுகின்ற அழகிய பதியிலே, உலகத்தின் இருளைச்சீய்த்து, ஒளியைப் பரப்புகின்ற விரும்பத்தக்க இரவியின் குலத்துக்கு ஒப்பற்ற விளக்கா கப்பிறந்து, வானுலகு முழுதையும் கடைத்தேறச் செய்து ஆட்கொண்ட வீரனை, சிவந்த கண்ணையுடைய நீண்ட கரிய மேகத்தை, இராமபிரானை, தில்லைத்தலத்திலுள்ள திருச்சித்திர கூடத்துள்ளே, எங்களுடைய ஈடற்ற முதல் வனை, எம் தலைவனைக் கண்குளிரக் காணும் நாள் எந்த நாளோ ?

அரும்சொற்பொருள்:— வெம்மை : விருப்பம். திருச்சித்திர கூடம் : தில்லை நகரிலே கோவிந்தராசப்பெருமாள் பள்ளி கொள்ள அமைந்த இடம்.

விளக்கம்:— இந்தப் பதிகம் பதினொரு பாடல்களிலும் குல சேகரப் பெருமாள் இராமகாதையைச் சுவைபட வடித்துத் தருகின்றார்.

பாடல்-120

இராமகாதை

வந்துஎதிர்ந்த தாடகைதன் உரத்தைக் கீறி
வருகுருதி பொழிதர,வன் கணைஒன்று ஏவி,
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து,
வல்லரக்கர் உயிர்உண்ட மைந்தன் காண்மின்,
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
அந்தணர்கள் ஒருமூவா யிரவர் ஏத்த
அணிமணிஆ சனத்துஇருந்த அம்மான் தானே.

-குலசேகரர்.

கருத்து:— வந்து எதிர்த்த தாடகையினது மார்பு பிளந்து இரத்தம் கொட்டுமாறு வலிய அம்பொன்றைச் செலுத்தி, மந்திரத்தில் வல்ல மறை அறிந்த விசுவாமித்திரனின் வேள்வியைக் காப்பாற்றி, வலிய அரக்கர்களின் உயிரைக் குடித்த மைந்தனே, சிவந்த தளிர்களின் ஊடே பொருந்திய, சிரிக்கும் பூக்களைஉடைய செழுமையான குளிர்ந்த சோலைகள் கொண்ட தில்லைத்தலத்திலுள்ள, திருச்சித்திர கூடத்துள்ளே, மூவாயிரம் அந்தணர்கள் பரவ, அழகிய அரியாசனத்திலே வீற்றிருக்கின்ற தலைவனுவான்.

அரும்சொற்பொருள்:— உரம்: மார்பு. மறைமுனிவன்: விசுவாமித்திரன்.

இராமகாதை

செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக்கு ஆகிச்
சினவிடையோன் சிலேஇறுத்து, மழுவாள் ஏந்தி,
வெவ்வரிநற் சிலேவாங்கி, வென்றி கொண்டு,
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன் தன்னே,
தெவ்வர்அஞ்ச நெடும்புரிசை உயர்ந்த பாங்கர்த்
தில்லேநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்,
எவ்வரிவெஞ் சிலேத்தடக்கை இராமன் தன்னே,
இறைஞ்சுவார் இணேஅடியே இறைஞ்சினேனே.

-குலசேகரர்.

கருத்து:— சிவந்த கோடுகள் படர்ந்த, நல்ல, கருமையான, நீண்ட கண்கள் பெற்ற சீதாதேவியை அடைய, கோபம் கொண்ட காளேயைச் செலுத்துகின்ற சிவபெருமானின் வில்லே ஒடித்து, மழுவாகிய படையைத் தாங்கி வந்த பரசுராமனின் கொடிய,கட்டமைந்த,நல்ல வில்லே ஏற்று, அந்தப்பரசுராமனே வென்று, வேல் வல்ல மன்னர்களின் பகையை அழித்த வீரனே, மாற்ருரை அச்சுறுத்தும் நீண்ட கோட்டைச்சுவர் உயர்ந்திருக்கின்ற பகுதியிலே உள்ள, தில்லே நகர்த் திருச்சித்திர கூடத்திலே, அம்பு தொடுக்கும் கட்டமைந்த கொடியவில்லேப் பெரிய கையில் தூக்கிய இராமபிரானேக் கும்பிடுவோருடைய இரண்டு திருவடிகளேயும் நான் வணங்கினேன்.

அரும்சொற்பொருள்:— தெவ்வர் : மாற்ருர். புரிசை : கோட்டைச்சுவர். வரி : கட்டு.

பாடல்–122

இராமகாதை

தொத்துஅலர்பூஞ் சுரிகுழல்,கை கேசி சொல்லால்
தொல்நகரம் துறந்து,துறைக் கங்கை தன்னை,
பத்தியுடைக் குகன்கடத்த, வனம்போய்ப் புக்குப்
பரதனுக்குப் பாதுகமும் அரசும் ஈந்து,
சித்திரகூ டத்துஇருந்தான் தன்னை, இன்று,
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்,
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற
இருநிலத்தார்க்கு இமையவர்நேர் ஒவ்வார் தாமே.

-குலசேகரர்.

கருத்து:— கொத்துக் கொத்தாக மலர்ந்த பூவைச் சூடிய சுருண்ட கூந்தலையுடைய கைகேயி ஏவலால், பழைய நகரத்தை விடுத்து, கங்கைத் துறையை அன்புகொண்ட குகப்பெருமாள் கடத்திக் கறையேற்றக் காடு சென்று, பரதாழ்வானுக்குத் திருவடியையும் அரசையும் நல்கி, சித்திர கூடப் பருப்பதத்திலே வீற்றிருந்த பெருமானை, இந்த நாள் தில்லை நகரத் திருச்சித்திர கூடத்திலே, முழுதும் கண்ணாரக் காணும் பேறுபெற்ற இந்தப் பரந்த உலகத்திலுள்ளாருக்குத் தேவர்கள் ஈடாகமாட்டார்.

அரும்சொற்பொருள்:— தொத்து: பூங்கொத்து. சுரிகுழல்: சுருட்டைக் கூந்தல்.

இராமகாதை

வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக்கொன்று,
வண்தமிழ்மா முனிகொடுத்த வரிவில் வாங்கி,
கலைவணக்கு நோக்குஅரக்கி மூக்கை நீக்கி,
கரனோடு தூடணன்தன் உயிரை வாங்கி,
சிலைவணக்கி மான்மரிய எய்தான் தன்னை,
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்,
தலைவணக்கிக் கைகூப்பி ஏத்த வல்லார்
திரிதலால் தவமுடைத்துஇத் தரணி தானே.

-குலசேகரர்.

கருத்து:— எதிரிகளின் பலத்தை வணங்க வைக்கின்ற மலை போன்ற தோள்களையுடைய விராதனைக்கொன்று, வளமையான தமிழ் முனிவனான அகத்தியன் அளித்த வரி வில்லைப் பெற்று, கலைமானை வெல்கின்ற கண் பெற்று வந்த, சூர்ப்பணகையின் மூக்கைப்போக்கி, கரதூடணர்கள் உயிரை அழித்து, வில்லை வளைத்து மாரீசமான் மடியுமாறு எய்த இராமபிரானை, தில்லை நகரிலே திருச்சித்திரகூடத்திலே தலைவணங்கி, கை கூப்பித் தொழ வல்ல அடியார்கள் வாழ்வதாலேயே இவ்வுலகம் தவமுடையதாகின்றது.

அரும்சொற்பொருள்:— விராது: விராதன். வரிவில்: சித்திரம் தீட்டப் பெற்றவில்.

இராமகாதை

தனமருவு வைதேகி பிரியல் உற்றுத்
தளர்வுஎய்திச் சடாயுவை,வை குந்தத்து ஏற்றி,
வனமருவு கவிஅரசன் காதல் கொண்டு,
வாலியைக்கொன்று, இலங்கைநகர் அரக்கர் கோமான்,
சினம்அடங்க மாருதியால் சுடுவித் தானைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்,
இனிதுஅமர்ந்த அம்மானை, இராமன் தன்னை
ஏத்துவார் இணைஅடியே ஏத்தி னேனே.

-குலசேகரர்.

கருத்து:— செல்வத்துக்கு உரிய சீதாப்பிராட்டியைப் பிரிந்து, சோர்வடைந்து, சடாயு என்னும் பறவைத் தந்தையை வைகுந்தத்துக்கு அனுப்பி, காட்டில் வாழ்கின்ற குரக்கினத் தலைவனாகிய சுக்கிரீவன் மீது அன்பு கொண்டு, வாலிக்கு மோட்சம் கொடுத்து, இலங்கை நகரை ஆண்ட அரக்கர் தலைவனாகிய இராவணனின் கோபம் அடங்குமாறு, அனுமனைக் கொண்டு, தீக் கொளுத்தச் செய்தவனை, தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்திலே இனிமையாக வீற்றிருந்த தலைவனை, இராம பிரானைப் போற்றுகின்றவர் திருவடி இரண்டையும் நான் கும்பிட்டேன்.

அரும்சொற்பொருள்:— தனம் : செல்வம். வைதேகி : சீதை.

இராமகாதை

குரைகடலை அடல்அம்பால் மறுக எய்து,
குலைகட்டி, மறுகரையை அதனால் ஏறி,
எரிநெடுவேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன்
இன்னுயிர்கொண்டு, அவன் தம்பிக்கு அரசும் ஈந்து,
திருமகளோடு இனிதுஅமர்ந்த செல்வன் தன்னை,
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்,
அரசுஅமர்ந்தான் அடிசூடும் அரசை அல்லால்
அரசாக எண்ணேன்மற்று அரசு தானே.

-குலசேகரர்.

கருத்து:— ஒலிக்கின்ற கடலை வலிய அம்பினால் நிலைகுலையு மாறு கலக்கி, அணைகட்டி, அந்த அணையின் மீது ஏறி, இலங்கையை அடைந்து, நெருப்பைக் கக்குகின்ற வேலை யுடைய அரக்கர் கூட்டத்தையும் அவர்களுடைய தலைவனாகிய இராவணனையும் இனிய உயிர்களைக்கவர்ந்து, இராவணனின் தம்பியாகிய வீடணனுக்கு இலங்கை அரசைக் கொடுத்து, சீதையோடு இனிமையாக வீற்றிருந்த இராமபிரானைத் தில்லைநகரிலே, திருச்சித்திர கூடத்திலே, அரசு வீற்றிருந்த அத் திருமாலின், திருவடி வருடும் அரசை யல்லாமல், ஏனைய அரசை அரசாட்சியாக எண்ண மாட்டேன்.

அரும்சொற்பொருள்:— குலை : அணை. மறுகரை : இலங்கைப் பகுதி. எரி : நெருப்பு.

விளக்கம்:— மலையாள நாட்டை ஆண்ட மன்னனாகிய குலசேகர ஆழ்வார் தம் அரசைப் பெரிதாக மதியாமையை இப்பாசுரம் புலப்படுத்தும்.

பாடல்-126

இராமகாதை

அம்பொன்நெடு மணிமாட அயோத்தி எய்தி,
அரசுஎய்தி, அகத்தியன்வாய்த் தான்முன் கொன்றான்,
தன்பெருந்தொல் கதைகேட்டு, மிதிலைச் செல்வி
உலகுஉய்யத் திருவயிறு வாய்த்த மக்கள்
செம்பவளத் திரள்வாய்த்தன் சரிதை கேட்டான்,
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்,
எம்பெருமான் தன்சரிதை செவியால், கண்ணால்
பருகுவோம்; இன்னமுதை மதியோம் இன்றே.

-குலசேகரர்.

கருத்து:— அழகிய பொன் வேய்ந்த நீண்ட அரதனக்கற்கள் அழுத்திய மாளிகைகள் மல்கிய அயோத்தி நகாத்துக்கு மீண்டு, அரசுசெலுத்தி, அகத்திய முனிவனிடம் தன்னால் முன்னே கொல்லப் பெற்ற இராவணனது விரிந்த பழைய கதையைக் கேட்டு, உலகம் கடைத்தேறச் சீதாப்பிராட்டியின் அழகிய வயிற்றிலே தோன்றிய லவன், குசன் என்ற மக்களின் சிறந்த பவழம் போன்ற திரண்ட வாயினால் தன் கதையைக்கேட்டு மகிழ்ந்தவனாகிய, தில்லைநகரத் திருச்சித்திரகூடத்திலே, எழுந்தருளியிருக்கும் எம் தலைவன் இராமபிரானின் சரிதையை, காதுகளினாலும், கண்களினாலும் அள்ளி உண்போம்; இனி இனிய அமுதத்தை நாம் மதிக்க மாட்டோம்.

அரும்சொற்பொருள்:— மிதிலைச் செல்வி: சீதாப்பிராட்டி. மக்கள் : லவ குசர்: கதை; இராமகதை.

பாடல்-127

இராமகாதை

செறிதவச்சம் புகன்தன்னைச் சென்று கொன்று,
செழுமறையோன் உயிர்மீட்டுத் தவத்தோன் ஈந்த
நிறைமணிப்பூண் அணிகொண்டு, லவணன் தன்னைத்
தம்பியால் வான்ஏற்றி, முனிவன் வேண்ட,
திறல்விளங்கும் இலக்குவனைப் பிரித்தான் தன்னை,
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
உறைவானை, மறவாதஉள்ளம் தன்னை
உடையோம்;மற்று உறுதுயரம் அடையோம் இன்றே.

-குலசேகரர்.

கருத்து:— மிக்க தவமுடைய சம்புகன் என்பவனைச் சென்று அழித்து, செழுமையான அந்தணனின் உயிரைக் காத்து, தவத்தவன் கொடுத்த நிறைந்த இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற ஆபரணங்களை ஏற்று, இலவணன் என்பவனை தன் தம்பியாகிய சத்துருக்கனைக் கொண்டு விண்ணுலகத்துக்குச் செலுத்தி, முனிவனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ஆற்றல் மிக்க இலக்குவனைப் பிரிந்த இராம பிரானை, தில்லை நகர்த் திருச்சித்திர கூடத்திலே, தங்கியிருக்கின்ற அப்பெருமானை, மறவாத மனத்தைப் பெற்றிருக்கின்றோம்; எனவே பொருந்தும் துன்பம் நமக்கு இல்லை.

அரும்சொற்பொருள்:— தவத்தவன் (இங்கே) அகத்தியன். தம்பி: (இங்கு) சத்துருக்கனன். முனி: (ஈண்டு) துருவாசன்.

இராமகாதை

அன்றுசரா சரங்களே,வை குந்தத்து ஏற்றி,
அடல்அரவப் பகைஏறி. அசுரர் தம்மை
வென்று,இலங்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற
விண்முழுதும் எதிர்வரத்தன் தாமம் மேவி,
சென்றுஇனிது வீற்றிருந்த அம்மான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்.
என்றும்நின்ருன் அவன்இவன்என்று ஏத்தி நாளும்
இறைஞ்சுமினே எப்பொழுதும் தொண்டீர்! நீரே.

-குலசேகரர்.

கருத்து:— அந்தநாளில் சராசரங்களையெல்லாம் வைகுந்தலோகத்துக்கு ஏற்றி, வலிமை வாய்ந்த பாம்புகளுக்குப் பகையான கருடன் மேல் ஏறிக் கொண்டு அவுணர்களை வென்று, விளங்குகின்ற அழகிய நான்கு தோள்களும் வெளிப்பட வானுலக முழுதும் தன்னை எதிர் கொண்டு அழைக்கத் தனக்கு உரிய வைகுந்தலோகத்தை அடைந்து, இனிமையாக அரசு செய்திருந்த தலைவனை, தில்லை நகரத் திருச்சித்திர கூடத்திலே என்றைக்கும் நின்ருளுகிய, அவனே இவன், என்று பாராட்டி, நாள் தோறும் எப்பொழுதும் தொண்டர்களே! நீங்கள் வணங்குங்கள்.

அரும்சொற்பொருள்:— அடல்: வலிமை. இலங்கும்: விளங்கும்.

இராமகாதை

தில்லைநகர்த் திருச்சித்ர கூடம் தன்னுள்
திறல்விளங்கு மாருதியோடு அமர்ந்தான் தன்னை,
எல்லையில்சீர்த் தயரதன்தன் மகனாய்த் தோன்றிற்று
அதுமுதலாத் தன்உலகம் புக்கது ஈறு.
கொல்லியலும் படைத்தானைக் கொற்ற ஒள்வாள்
கோழியர்கோன் குடைக்குலசே கரன்சொல் செய்த
நல்லியலின் தமிழ்மாலை பத்தும வல்லார்,
நலம்திகழ்நா ரணன்அடிக்கீழ் நண்ணு வாரே.

-குலசேகரர்.

கருத்து:— தில்லை நகர்த் திருச் சித்திர கூடத்திலே ஆற்றல் பெற்று விளங்குகின்ற அனுமனோடு உறைந்திருக்கின்ற வணங்கிய பெருமானை, கணக்கற்ற சிறப்புப்பெற்ற தயரதச் சக்கரவர்த்திக்கு மகனாகப் பிறந்தது தொட்டு, தனக்குரிய கலங்காப் பெருநகரான வைகுந்தம் புகுந்தது ஈறாக, கொல்லும் தொழில் வல்ல, படைக்கலங்களைக் கொண்ட, ஒளி பொருந்தும் வெற்றி வாள் ஏந்திய சேரர் தலைவன், குடை நிழல் உறையும் குலசேகரன், சொல்லில் தொடுத்த நல்ல இயல் தமிழ் மாலையிலுள்ள பத்துப் பாக்களும் பாட வல்லவர், நன்மைக்கு உறைவிடமான நாராயணனின் திருவடிக்கீழ்ப் பொருந்தி வாழ்வார்.

அரும்சொற்பொருள்;— திறல் : ஆற்றல். எல்லைஇல் : அளவு இல்லாத. தானை : சேனை. நண்ணுவார் : சேரப்பெறு வார்கள்.

பாடல் முதற்குறிப்பு

பாடல் முதற்குறிப்பு (தொடர்ச்சி)

பாடல் முதற்குறிப்பு (தொடர்ச்சி)

பாடல் முதற்குறிப்பு (தொடர்ச்சி)

அறம்பழுக்கும் தருவே! என்
குருவே! என் தன்
ஆர்உயிருக்கு ஒருதுணையே!
அரசே! பூவை
நிறம்பழுக்க அழகுஒழுகும்
வடிவக் குன்றே!
நெடுங்கடலுக்கு அணையளித்த
நிலையே! வெய்ய
மறம்பழுக்கும் இலங்கை,இரா
வணனைப் பண்டுஓர்
வாளியினால் பணிகொண்ட
மணியே! வாய்மைத்
திறம்பழுக்கும் ஸ்ரீராம
வள்ள லே! நின்
திருவருளே அன்றிமற்றோர்
செயல்இ லேனே.

-வடலூர் வள்ளலார்.

அச்சிட்டோர்: திருமகள் அச்சகம், காரைக்குடி.

திருமகள் அச்சகம்

காரைக்குடி. போன்: 313.